
www.padippakam.com

எழுச்சி

# தலித் முரசு

டிசம்பர், 1999 • அடக்கப்பட்ட மக்களின் சமூக நீதித் திங்களிதழ் • ரூ.5



- தூக்கு தண்டனைக்கு எதிராக எழுத்தாளர்களின் ஒருமித்த குரல்
- கோமதி நாயகம் அறிக்கை : உண்மைகளின் படுகொலை
- தலித்தியமும் உலக முதலாளியமும்

## வரலாறு காணாத

# தலித் பேரணி

படிப்பகம்

www.padippakam.com





# இந்து சமூக அமைப்பு உள்ளவரை பாகுபாடுகள் ஒழியாது

தீண்டத்தகாத மக்கள் வெறுத்து ஒதுக்கப்படுவதைவிட, மறுக்கப்பட்டு வரும் தங்களின் மனித் தன்மையைத் திரும்பப் பெறுவதே முதன்மையானது. இந்துக்கள், தீண்டத்தகாதவர்களுக்கு இழைக்கும் கொடுமை என்பது, வெளி நாட்டவர் கற்பனை செய்து பார்க்க முடியாத அளவுக்கு இருக்கிறது.

பொது வசதிகளைப் பயன்படுத்திக் கொள்வதில் கூட, வெளிப்படையான பாகுபாடு கடைப்பிடிக்கப்படுகிறது. பொது நிர்வாகம், மிக மோசமான அளவில் தீண்டத்தகாத மக்களுக்கு எதிராக உள்ளது. இப்பாகுபாடு - நீதி மன்றம், அரசுத் துறைகள், கூட்டுறவு வங்கிகள், குறிப்பாக காவல் துறை என அனைத்திலும் உள்ளது. நிலம் கையகப்படுத்தப்படுவதிலும், வேலை வாய்ப்புகளிலும் மிக அதிகமான அளவில் தீண்டத்தகாத மக்களுக்கு எதிரான பாகுபாடுகள் உள்ளன. அரசுப் பணிகளில் இந்தப் பாகுபாடு மிகவும் ஆழமாக வேரூன்றியுள்ளது.

நிர்வாகத்தில் தீண்டத்தகாத மக்கள், இந்துக்கள் மீது ஆளுமை செலுத்த முடியாத வகையில் கொள்கை முடிவுகள் வகுக்கப்படுகின்றன. மிகத் தெளிவாகச் சொல்ல வேண்டுமெனில், தீண்டத்தகாத மக்களுக்கு எதிரான பாகுபாடு - துப்புரவுத் தொழிலில் அடிமட்ட நிலையில் மட்டும்தான் இல்லை. இதில் பாகுபாட்டிற்கான அவசியமே இல்லை. ஏனெனில், இது முழுவதும் தீண்டத்தகாத மக்களுக்கென்றே உருவாக்கப்பட்டுள்ளதால், இந்துக்களிடமிருந்து இதற்கு எந்தப் போட்டியும் இல்லை.

இந்நிலையில், குடிமக்களின் உரிமைகள் என்பது, தீண்டத்தகாத மக்களின் உரிமைகள் என்று பொருள்படாது; மக்களால், மக்களுக்கான அரசு என்பது தீண்டத்தகாத மக்களுக்கான அரசு என்று பொருள்படாது; அனைவருக்கும் சமமான வாய்ப்புகள் என்பது, தீண்டத்தகாத மக்களுக்கான சமமான வாய்ப்பு என்று பொருள்படாது; அனைவருக்கும் சம உரிமை என்பது, தீண்டத்தகாத மக்களுக்குச் சம உரிமை என்று பொருள்படாது.

இந்தியா முழுவதிலும் மூலை முடுக்கெல்லாம் அடிப்படை வாய்ப்புகள் முற்றிலும் மறுக்கப்பட்ட தீண்டத்தகாத மக்கள் - பாகுபாட்டுக்கு ஆளாகின்றனர்; பல்வேறு இழப்புகளைச் சந்திக்கின்றனர்; பல்வேறு அநீதிகளுக்கு ஆட்படுகின்றனர். இந்தப் பாகுபாடுதான் இவர்களின் முன்னேற்றத்திற்குத் தடையாக உள்ளது. இது, ஏதாவது ஒரு வகையில் தீண்டத்தகாத மக்கள் - பயத்துடனும், வேலை இல்லாமலும், தாக்குதலுக்கும், கொடுமைகளுக்கும் ஆளாகக் காரணமாகின்றது! இம்மக்கள், பாதுகாப்பற்ற வாழ்க்கையை வாழ்கின்றனர்.

இன்னொரு வகையான பாகுபாடு ஒன்றுள்ளது. திறமையுள்ள ஒரு தீண்டத்தகாதவரின் கண்ணியத்தையும் உயர்வையும் குறைத்துக் காட்டுவதற்கு என ஒரு திட்டமிட்ட பிரச்சாரம் மேற்கொள்ளப்படுகின்றது. ஒரு இந்து தலைவன், மிகப்பெரும் இந்திய தலைவராகப் போற்றப்படுவார். அவர் ஒரு பார்ப்பனராக இருந்தாலும் யாரும் அவரை பார்ப்பனர்களின் தலைவன் என்று குறிப்பிடுவதில்லை. ஆனால், ஒரு தலைவன் தீண்டத்தகாதவராக இருந்தால், அவரின் சாதி பற்றி குறிப்பிடப்பட்டு - அவர் தீண்டத்தகாத மக்களின் தலைவராக விவரிக்கப்படுவார்.

ஒரு இந்து டாக்டர், மிகப்பெரும் இந்திய டாக்டராக சித்தரிக்கப்படுவார். அவர் ஒரு அய்யங்காராக இருப்பினும், எவரும் அவரை ஒரு அய்யங்கார் என்று கூற மாட்டார்கள். ஆனால், அதே டாக்டர் ஒரு தீண்டத்தகாதவராக இருப்பார் எனில், அவர் ஒரு தீண்டத்தகாதவர் என்று அடையாளம் காட்டப்படுவார். ஒரு இந்து பாடகர், பெரிய இந்தியப் பாடகராக போற்றப்படுவார். ஆனால், அதே பாடகர் ஒரு தீண்டத்தகாதவராக இருக்கும் பட்சத்தில் - அவர் ஒரு தீண்டத்தகாதப் பாடகராக விளம்பரப்படுத்தப்படுவார்.

இதுபோன்ற பாகுபாடுகள், இந்துக்களின் எண்ணத்தில் இருந்து தோன்றியவை. அதாவது, தீண்டத்தகாத மக்கள் - தாழ்ந்த மக்கள்; அவர்கள் எவ்வளவுதான் தகுதியும் திறமையும் பெற்றிருந்தாலும் - அவர்கள் தீண்டத்தகாத மக்களிடையேதான் உயர்ந்தவர்களாவர்; பொது மக்கள் பார்வையில் அவர்கள் தாழ்ந்தவர்களே; அவர்கள் ஒரு போதும் உயர்ந்தவர்களாகவும் அதுவும் இந்துக்களிலுள்ள பெரிய மனிதர்களுக்கு சமமாக ஆகவே முடியாது.

தீண்டத்தகாத மக்களுக்கு எதிரான பாகுபாடு என்பது, ஆழ்ந்த, உறுதியான இந்து உளவியல் தன்மையின் வெளிப்பாடுதான். சட்ட, நிர்வாகத் துறையிலும் இந்தப் பாகுபாடு கடைப்பிடிக்கப்படுகிறது. இந்தப் பாகுபாடுகளுக்கு இந்துக்களின் பயம்தான் அடிப்படைக் காரணமாக இருக்கிறது. தீண்டத்தகாத மக்கள் சுதந்திரமாகச் செயல்பட அனுமதித்தால், தங்களைவிட வாழ்க்கையில் முன்னேறி - இந்து சமூக அமைப்புக்கு குந்தகம் விளைவித்து விடுவார்களோ என இந்துக்கள் அஞ்சுகின்றனர். தீண்டத்தகாத மக்கள் மீதான இந்து மேலாண்மைக்கும் ஆதிக்கத்திற்கும் இதுவே காரணம். இந்து சமூக அமைப்பு இருக்கும்வரை, தீண்டத்தகாத மக்களுக்கு எதிரான பாகுபாடுகள் இருந்தே தீரும். ■

*- டாக்டர். அம்பேத்கர் ஆங்கில நூல் தொகுப்பு : 5 பக்கம் : 108*



படிப்பகம்

www.padippakam.com

எழுச்சி தலித் முரசு
Volume : 3 Issue : 6
டிசம்பர், 1999 • ஆண்டு : 3 - இதழ் : 11

# 'அமைதியான' சதித் திட்டங்கள்

பாரதீய ஜனதா கட்சி, தற்பொழுது பல்வேறு கூட்டணிக் கட்சிகளின் துணையுடன் ஆட்சி செய்வதால், தங்களின் 'மறைக்கப்பட்ட செயல் திட்டங்களை' செயல்படுத்த வாய்ப்பில்லை என்றொரு கருத்து - முற்போக்காளர்களிடையேகூட நிலவி வருகிறது. இது முற்றிலும் தவறான கருத்தாகும் என்பதை, சங்பரிவாரங்களின் 'மறைக்கப்பட்ட செயல் திட்டங்கள்', ஒன்றன் பின் ஒன்றாக நடைமுறைப் படுத்தப்படுவதிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

• போப் ஜான் பால் அவர்களின் வருகையின் போது, 'சங்பரிவாரங்கள்' நாடு தழுவிய அளவில் மதமாற்றத்திற்கு எதிராகப் பிரச்சாரங்களைச் செய்தன. இதற்கு பா.ஜ.க., மறைமுகமாக ஆதரவளித்தது. • தமிழகத்தில் மட்டும் எட்டு இடங்களில் தொடர்ச்சியாக கிறித்துவர்களின் தேவாலயங்கள் எரிக்கப்பட்டன. • ராமன் கோயில் கட்டுவதற்கான கட்டுமானப் பணிகளும் விரைவாக நடைபெற்று வருகின்றன. • தற்பொழுது, முன் எப்போதும் இல்லாத வகையில், வரலாரைத் திரிக்கும் சதி வேலையில் 'இந்துத்துவா' சக்திகள், பா.ஜ.க. அரசின் துணையுடன் களமிறங்கியுள்ளன.

பாபர் மசூதி இருந்த இடத்தில்தான் ராமன் பிறந்தான் என்று 'கண்டுபிடித்த' பி.ஆர்.குரோவர் என்ற ஆர்.எஸ்.எஸ். காரர், பா.ஜ.க. அரசு பொறுப்பேற்ற பிறகு 'இந்திய வரலாற்று ஆய்வுக்குழு'வின் (Indian Council of Historical Research - ICHR) தலைவராக நியமிக்கப்பட்டிருக்கிறார். பேரா. எம்.எல். சோந்தி, என்பவர் 1960களில் 'ஜன சங்' சார்பில் தேர்தலில் நின்றவர். 'இந்துத்துவா' வாதியான இவரைத்தான் பா.ஜ.க. அரசு, 'இந்திய சமூக அறிவியல் ஆய்வுக் குழுவின்' (Indian Council of Social Science Research - ICSSR) தலைவராக நியமித்துள்ளது. கடைந்தெடுத்த 'இந்துத்துவா' வாதியான முரளி மனோகர் ஜோஷிதான் இதற்கெல்லாம் பொறுப்பாக இருக்கும் அமைச்சர்.

இந்திய பாடத்திட்டங்களை வரையறுக்கும் முக்கிய 'கல்வி ஆய்வு மற்றும் பயிற்சிக்கான தேசிய குழு' விலும் (National Council of Educational Research and Training - NCERT) ஆர்.எஸ்.எஸ். காரர்கள்தான் முக்கிய பொறுப்புகளில் உள்ளனர். இதன் மூலம், வரலாற்றாசிரியர்கள் இதுவரை ஆதாரத்துடன் எடுத்து வைத்த வாதங்களை - இவர்கள் ஆதாரமின்றி மறுத்து மாற்றி எழுதத் துவங்கியுள்ளனர். பா.ஜ.க. ஆளும் உத்திர பிரதேசம், மத்திய பிரதேசம், ராஜஸ்தான், குஜராத், இமாச்சலப் பிரதேசம் போன்ற மாநிலங்களில் - 'இந்துத்துவா', ஆர்.எஸ்.எஸ். பார்வையிலான வரலாறுகள் ஏற்கனவே பெருமளவு திரித்து எழுதப்பட்டு விட்டன.

அண்மையில், புகழ் பெற்ற வரலாற்றாசிரியரான பேரா. ரொமிலா தாப்பர் மற்றும் இந்தி எழுத்தாளர் ராஜேந்திர யாதவ் இருவரும் மய்ய அரசின் 'பிரசார பாரதி வாரிய'த்திலிருந்து நீக்கப்பட்டுள்ளனர். இவ்விருவரும் நீக்கப்பட்டுள்ளது கடுமையான கண்டனத்திற்குரியது. வானொலி, தொலைக்காட்சி ஆகிய இரண்டையும் கட்டுப்படுத்தும் அதிகாரம் 'பிரசார பாரதி குழு'விடம்தான் உள்ளது. தகவல் ஒளிபரப்புத் துறை அமைச்சகத்தின் கீழ் இது செயல்படுகிறது. இது போன்ற முக்கிய துறைகளை பா.ஜ.க. தன்வசம் வைத்துள்ளது.

சமூக அறிவியல், வரலாற்றுப் பாடப்புத்தகங்களில் தலித், சிறுபான்மையினர் மற்றும் பெண்களுக்கு எதிரான பாடத்திட்டங்கள் சேர்க்கப்பட்டுள்ளன. பிஞ்சிலேயே நஞ்சை புகுத்தும் பாடத்திட்டங்களால், குழந்தைகள் மனதில் சாதி, மதவாத கருத்துக்கள் இடம் பெற்றுவிடும். இதையெல்லாம் கண்டும் காணாமல் கூட்டணிக் கட்சிகள் அமைதி காக்கின்றன. எனவே, பா.ஜ.க.வின் இதுபோன்ற 'அமைதியான' சதித் திட்டங்களை எதிர்த்து, முற்போக்கு இயக்கங்களும் மத சார்பற்ற சக்திகளும் ஒன்றிணைந்து குரல் எழுப்ப வேண்டும். இல்லை எனில், பள்ளிக் கூடங்களிலும் சாதி, மதவெறி கலவரங்கள் வருவதைத் தடுக்க முடியாமல் போய்விடும். எச்சரிக்கை! •

*ஆசிரியர், வெளியிடுபவர்*
**பெ. சந்திரசேகரன்**
*பொறுப்பாசிரியர்*
**புனித பாண்டியன்**

| | |
|---|---|
| ஆண்டுக் கட்டணம் : | ரூ. 50/- |
| நூலகக் கட்டணம் : | ரூ.100/- |
| வாழ் நாள் கட்டணம் : | ரூ.1000/- |

*விளம்பரக் கட்டணம்*

| | |
|---|---|
| கால் பக்கம் : | ரூ.250/- |
| அரைப்பக்கம் : | ரூ.500/- |
| முழுப்பக்கம் : | ரூ.1000/- |
| அட்டைப் பின்புறம் : | ரூ.2000/- |

*முகவரி*
6,97ஆவது தெரு, 15ஆவது செக்டர்,
கே.கே.நகர், சென்னை - 600 078
☎ : 483 07 68

*தொடர்பு முகவரி*
ஈ-21,தமிழ்நாடு வீட்டுவசதிவாரிய
குடியிருப்பு,அண்ணாமுதன்மைச்சாலை
கே.கே.நகர்.சென்னை-600078
தொலைநகல் / தொலைபேசி : 474 11 88
E-mail : ambedkar@md4.vsnl.net.In



படிப்பகம்

www.padippakam.com

# வாக்குமூலம்

◈ மதச் சுதந்திரமும் வழிபாட்டுச் சுதந்திரமும் ஆசியா முழுவதும் மதிக்கப்பட வேண்டும். ஏனெனில், அடிப்படையான இவ்வுரிமை மறுக்கப்பட்டால் - மனித நாகரிகத்தின் அடித்தளமும் சுதந்திரமும் ஆட்டம் கண்டுவிடும்.

- போப் இரண்டாவது ஜான் பால், 6.11.99 அன்று புதுதில்லியில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில்.




◈ தூக்குத் தண்டனையை ரத்து செய்ய வேண்டும் என்று எங்கள் கட்சி தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது. எனவே, புதிய நூற்றாண்டின் தொடக்கத்துக்கு நல்ல அறிகுறியாக - தூக்குத் தண்டனையை ஒட்டுமொத்தமாக ரத்து செய்யும் முடிவை, குடியரசுத் தலைவர் மேற்கொள்ள வேண்டும்.

- சிம்ரஞ்சித் சிங் மான், நாடாளுமன்ற உறுப்பினர், தலைவர், சிரோன்மணி அகாலி தளம் (அமிர்தசரஸ்) இந்திய குடியரசுத் தலைவருக்கு அனுப்பியுள்ள வேண்டுகோள் மனுவில்.

◈ காலம் முழுவதும் பொருள் தேடிக் கொண்டே இருக்க வேண்டாம். ஆணாதிக்கத்திலிருந்து விடுபட, பெண்ணை வெளிக்கொணர்ந்தது சரி. அன்பு, பாசம், காதல் இத்தனையையும் மறக்கடித்து அவளை மறுபடி மற்றொரு எந்திரமாக மாற்றியதுதான் சரியல்ல.

- டாக்டர். ஜி. சிவராமன், சித்த மருத்துவர், 'தினமணி' கட்டுரை ஒன்றில்.

◈ தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட, சிறுபான்மை மக்களுக்காக நான் பாடுபட வேண்டியுள்ளது. எனது பிணத்திற்கு ஒரு தலித் தான் கொள்ளி வைக்க வேண்டும். என் மகன் கொள்ளிவைக்கக் கூடாது. மதவாத சக்திகளுக்கு எதிராக நான் பிரச்சாரம் செய்யப் போகிறேன்.

- சமூக நீதிக் காவலர் வி.பி. சிங், முன்னாள் பிரதமர், செய்தியாளர்களிடையே.

◈ கைதி என்பவன், திருந்துவதற்காக சிறையின் பொறுப்பில் விடப்பட்டுள்ள நபர் என்பதைத் தவிர மற்றபடி, உரிமைகள், சலுகைகள் அனைத்தையும் பெறுவதற்குத் தகுதி வாய்ந்த - உரிமையுடைய ஒரு மனிதனே என்ற முறையில் அவனை நடத்துவதற்கு ஏற்றவாறு - வெவ்வேறு துறைகளில் ஓராண்டு பயிற்சி அளிக்கப்பட்டவரை சிறைப்பணியில் நியமிக்க வேண்டும்.

- நீதிபதி. மு.மு. இஸ்மாயில், முன்னாள் நீதிபதி, 1992இல் சிறை சீர்திருத்தம் குறித்து அமைக்கப்பட்ட ஆணையத்தின் பரிந்துரையில்.

◈ நீதித்துறையை விமர்சிப்பவர்களை, நீதிமன்ற அவமதிப்பு வழக்கு என்று கூறி கட்டுப்படுத்த முடியாது.

- நீதிபதி ஏ. எஸ். ஆனந்த், உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதி, சென்னையில் ஆற்றிய உரையில்.

'கற்பழிப்பவர்'களுக்கு மரண தண்டனை அளிப்பது, மனித உரிமை தொடர்புடையது என்பதால் நாங்கள் ஆதரவளிக்கவில்லை. இது சட்டமானால், குற்றவாளிகள் தாங்கள் 'கற்பழிப்பவர்'களை கொலை செய்யவும் வாய்ப்புள்ளது. மேலும், 'கற்பழிப்பு' வழக்குகளில் குற்றவாளிகளுக்குத் தண்டனை அளிக்கும் தீர்ப்புகள் மிகவும் குறைவாக உள்ளன. இந்நிலையில், மரண தண்டனை விதிக்கும் வகையில் சட்டம் கொண்டு வந்தால், தண்டனை அளிப்பது மேலும் குறைந்துவிடும். இதற்கு பதிலாக, 'கற்பழிப்பு' வழக்குகளில் விரைவாகத் தீர்ப்பு வழங்குவதற்கான நடவடிக்கைகளை - மத்திய உள்துறை அமைச்சகம் மேற்கொள்ள வேண்டும்.

- லீனா மெகன்தலே, இணைச் செயலாளர், 'தேசிய பெண்கள் ஆணையம்', மத்திய அரசுக்கு எழுதியுள்ள கடிதத்தில்.

◈ பாரதீய ஜனதா கட்சி நாகரீகமற்றது. அது காட்டுமிராண்டிக் கட்சியாகும். இதை நான் இதற்கு முன்பும் சொல்லியிருக்கிறேன்; இப்போதும் சொல்கிறேன்; எப்போதும் சொல்வேன்.

- ஜோதிபாசு, மேற்கு வங்க முதல்வர், புதுதில்லியில் செய்தியாளர்களிடையே.

◈ இஸ்லாம் மதத்தைச் சேர்ந்த பல சாதியினரையும் மத்திய அரசு, பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் என்ற பிரிவில் இணைத்துள்ளது. ஆனால், இதில் பல்வேறு தலித் பிரிவுகள் உள்ளன. இப்பிரிவுகளைச் சார்ந்த மக்களுக்கு இடஒதுக்கீடு ஏதும் இல்லை.

- கமால் அஸ்ரப், பொதுச் செயலாளர், 'அகில இந்திய பின்தங்கிய முஸ்லிம் மோர்ச்சா', செய்தியாளர்களிடையே.

◈ காலனி நாடுகளின் வரலாறு, சாம்ராச்சியத்தை உருவாக்கியவர்கள் பார்வையிலேயே எழுதப்பட்டிருப்பதையும், இந்திய தேசிய வரலாறு தலைவர்களைச் சார்ந்தும் - மேட்டுக்குடியின் நோக்கிலேயும் பதிவு செய்யப்பட்டிருப்பதையும் வரலாற்றாசிரியர்கள் உணர்ந்தார்கள். எனவே, மக்களை மய்யமாகக் கொண்டே அடித்தளக் கண்ணோட்டத்தின்படி, வரலாறு எழுதப்பட வேண்டும் என்ற கருத்து உறுதிப்பட்டது.

- எஸ். தியடோர் பாஸ்கரன், ஆய்வாளர், 'இந்தியா டுடே' யில்

◈ போப் மன்னிப்புக் கேட்க வேண்டும் என்கிறார்கள். ஆனால், பல நூற்றாண்டுகளாக மிருகங்களை விடக் கீழாக தலித் மக்கள் நடத்தப்பட்டு வருகின்றனரே, அதற்கு யார் மன்னிப்புக் கேட்பது?

- எஸ். கிருஷ்ணன், பத்திரிகையாளர், 'இந்து' ஆங்கில நாளேட்டில்.

◈ "கோயில் கருவறையில் பதுக்கி வைத்திருந்த 1,000 லிட்டர் கள்ளச் சாராயத்தை போலிஸ் அதிரடிப்படை கைப்பற்றியது"


- 9.11.99 அன்று 'தினமணியில்' வெளிவந்த செய்தி.



படிப்பகம்

www.padippakam.com






# எழுத்தாளர்களின் ஒருமித்த குரல்

தமிழகத்தின் முன்னணி எழுத்தாளர்கள் முன் எப்போதும் இல்லாத வகையில், தமிழகத்தின் தலைநகரில் - மனிதநேயம் தழைக்க ஒன்றிணைந்து குரல் கொடுத்து வரலாற்றில் இடம் பெற்றுள்ளனர். 'மரண தண்டனை எதிர்ப்பு இயக்கம்' சார்பில் - 'மரண தண்டனைக்கு எதிரான தமிழக எழுத்தாளர் மாநாடு' 27.11.99 அன்று சிறப்புற நடைபெற்றது.

இம்மாநாட்டில் புதுவை பி.யு. சி.எல். தலைவர் ரவிக்குமார் அறிமுக உரை நிகழ்த்தினார். தலைமையுரை நிகழ்த்திய எஸ்.வி. ராஜதுரை தமது உரையில், ''இலக்கியம் படைத்து விட்டோம் என்று நாம் ஒதுங்கி இருக்க முடியாது. சமூகப் பொறுப்பு எழுத்தாளர்களுக்கு உள்ளது. எனவே, மரண தண்டனைக்கு எதிராகக் குரல் கொடுப்பது மிகவும் அவசியமாகிறது. நாங்கள் ராஜிவ் வழக்கில் குற்றம் சுமத்தப்பட்டுள்ள நால்வருக்கும் மட்டுமல்லாது, உலகில் உள்ள அனைத்து நாடுகளிலும் தூக்கு தண்டனை கூடாது என்பதற்காகப் போராடி வருகிறோம். அப்துல்லா ஒஜாலன், நவாஸ் செரீப் ஆகியோருக்கும் கூட தூக்கு தண்டனை கூடாது என்று தார்மீக ரீதியில் குரல் எழுப்புகிறோம்'' என்றார்.

*தமிழண்ணல்:* இனி, எழுத்தாளர்கள் இதுபோன்ற கருத்தில் ஒன்று பட்டு நிற்க

**தூக்கு தண்டனை கூடாது**

வேண்டும். எழுத்தாளர்களின் இந்தக் குரல் ஓங்கி ஒலிக்க வேண்டும். மரணதண்டனை ஒழிப்பு அரசியல் சட்டத்தில் இடம் பெற வேண்டும்.

*கவிஞர் இன்குலாப் :* நிறுவனப்படுத்தப்பட்ட அரசு வன்முறையை - நாம் முற்றிலும் எதிர்த்தாக வேண்டும்.

*கி. ராஜநாராயணன் :* மரண தண்டனை என்பது எனக்கு, கொலை செய்வதைவிட கொடூரமான செயலாகப் படுகிறது. படைப்பாளிகளாகிய நாங்கள் தூக்குத் தண்டனையை வெறுக்கிறோம். வேண்டாம் என உரத்துச் சொல்கிறோம்.

*மு. மேத்தா :* இனிமேல் எந்தக் கூட்டம் நடத்தினாலும் 4 நாற்காலிகளைக் காலியாக வைத்திருப்போம். நாளானால் என்ன? நால்வரும் வருவார்கள்; நம்முடன் அமர்வார்கள்.

*செயப்பிரகாசம் :* சட்டத்திற்குப் புறம்பாக ஒரு கொலை செய்தால் அது தண்டனை. ஆனால், சட்ட ரீதியாக ஒரு கொலையை அரசே செய்யலாமா? பழிக்குப் பழி, கொலைக்குக் கொலை என்பது அடிமைச் சமுதாயத்தின் விதி. இந்த அடிமைச் சமுதாயத்தின் விதிகளை நாம் இன்னும் வைத்துக் கொண்டிருப்பது கேவலமானது.

இம்மாநாட்டில், சிற்பி பாலசுப்பிரமணியம், கோவை ஞானி, பொன்னீலன், அ. மார்க்ஸ், நா. முத்துசாமி, ராஜம் கிருஷ்ணன், சுந்தரராமசாமி, இந்திரா பார்த்தசாரதி போன்ற முன்னணி எழுத்தாளர்களும் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினர்.

குடியரசுத் தலைவருக்கு அனுப்பும் கருணை மனுவில் 138 தமிழக எழுத்தாளர்கள் கையெழுத்திட்டனர். எதிர் காலத்தில், தமிழகத்தின் முக்கிய மக்கள் பிரச்சனைகளில் இதுபோன்று, எழுத்தாளர்கள் ஒன்றிணைந்து குரல் கொடுப்பார்கள் என்ற நம்பிக்கை வித்தை இம்மாநாடு ஊன்றியுள்ளது.

மாநாடு வெற்றிகரமாக முடிவடைந்து, அனைவரும் வெளியே வரும்போது, யாரும் எதிர்பாராத ஒரு நாகரீகமற்ற செயலும் நடந்தது. இம்மாநாட்டைச் சிறப்புற ஒருங்கிணைத்த அறிஞர் எஸ்.வி. ராஜதுரை அவர்களையும் எழுத்தாளர் சுந்தர ராமசாமியையும், பின் நவீனத்துவவாதி என்று சொல்லிக்கொள்ளும் வளர்மதி என்பவர், போதையில் அவதூறு பேசி அருவருக்கத்தக்க வகையில் நடந்து கொண்டதை - அனைவரும் வன்மையாகக் கண்டித்தனர்.

- நம் செய்தியாளர்



படிப்பகம்

# கடமையாற்றுபவர் மன நோயாளியா?

**தமிழக முதல்வருக்கு, ரஜினிகாந்த் மனநோயாளியாகத் தெரியவில்லையா?**

**டாக்டர். இனியன் இளங்கோ**

தூசி காவல் நிலையம் தாக்கப்பட்டது; காவல்துறை அதிகாரி அரிதாசுக்கு ஆதரவாக பொதுமக்கள் தன்னெழுச்சியாகத் திரண்டு சாலை மறியல் செய்தனர்' என்ற செய்தி நவம்பர் 1ஆம் தேதி காலை - அனைத்து நாளேடுகளிலும் முதல் பக்கத்தில் இடம் பெற்றது. இது குறித்து ஆய்வு செய்ய களத்திற்குச் சென்ற போது, 28 வயதே நிரம்பிய துடிப்பான காவல் அதிகாரியான அரிதாசுக்கு நேர்ந்த கொடுமை தெரியவந்தது. இது, சமுதாயத்தில் இன்று நிலவி வரும் அரசு அதிகார முறைகேட்டின் மோசமான வெளிப்பாடாகும்.

சென்னை அருகே உள்ள தாழம்பூர் இவரது சொந்த ஊர். சிறு வயதிலிருந்தே காவல் துறையில் சேர ஆர்வம் கொண்டிருந்த அரிதாஸ், பி.ஏ. பட்டம் படித்த பிறகு காவல்துறை உதவி ஆய்வாளர் பணியில் சேர்ந்தார். 1998ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் காஞ்சி மாவட்டத்தைச் சேர்ந்த தூசி என்கிற சிற்றூரில் காவல் துறை உதவி ஆய்வாளரானார்.


அரிதாஸ்

தூசி நகருக்கு வந்ததிலிருந்தே இவர் கள்ளச் சாராய வியாபாரிகளை ஒடுக்கியிருக்கிறார். இவரது நேர்மையான பணி காரணமாக, தூசி வட்டாரத்தில் கள்ளச் சாராயமே இல்லாமல் இருந்தது. இதனால் பெரிதும் பாதிக்கப்பட்ட கள்ளச் சாராய வியாபாரிகளும் லஞ்ச வருமானமில்லாமல் கோபமடைந்த காவல் துறை அதிகாரிகளும் - அரிதாசை வேறு இடத்திற்கு மாற்றிவிட திட்டம் தீட்டினர்.

இதனடிப்படையில், திருவண்ணாமலையில் 'பந்தோபஸ்து' பணிக்காக அரிதாஸ் அனுப்பப்பட்டார். 'பந்தோபஸ்து' பணி முடிந்து அவர் தூசிக்குத் திரும்பியபோது, மீண்டும் கள்ளச் சாராயம் தங்கு தடையின்றி விற்கப்படுவதைக் கண்டு வேதனை அடைந்தார். இது மட்டுமின்றி, கண்ணெதிரிலேயே கள்ளச் சாராய வியாபாரிகள் - காவல் நிலையத்திற்குள் வருவதும் போவதுமாக இருப்பதைப் பார்த்து அதிர்ந்தார்.

இவர் ஊரில் இல்லாத நேரத்தில், அவர் வேறு இடத்திற்கு மாற்றப்படுகிறார் என்ற செய்தியின் அடிப்படையில், மற்ற காவல் துறை அதிகாரிகளும் கள்ளச் சாராய வியாபாரிகளும் மீண்டும் தங்கள் உறவைப் புதுப்பித்துக் கொண்டனர். இதைக் கண்டு கோபமுற்ற அரிதாஸ், வேகமாக செயலில் இறங்கினார். கள்ளச் சாராய வியாபாரிகளை ஒன்றன்பின் ஒன்றாக கைது செய்து சிறையில் அடைத்தார்.

ஆனால், இவர்காவல் நிலையத்தை விட்டுச் சென்ற பிறகு, மற்ற காவல் துறை அதிகாரிகள் அவர் கைது செய்த கள்ளச் சாராய வியாபாரிகளை விடுவித்து விடுவர். இவ்வாறு ஒவ்வொரு முறையும், தனக்குக் கீழ்ப்படிந்து நடக்க வேண்டிய மற்ற காவல் துறை பணியாளர்களே - கைது செய்யப்பட்ட குற்றவாளிகளை தனது அனுமதியின்றி விடுவிப்பது கண்டு அரிதாஸ் பெரிதும் மனஉளைச்சலடைந்தார்.

கள்ளச் சாராயம் மூலம் வரும் கள்ளப் பணத்தில் திளைத்துப் போன மற்ற காவலர்கள், தொடர்ந்து அரிதாசுக்குக் கீழ்ப்படிய மறுத்து அவருக்கு பல பிரச்சனைகளை ஏற்படுத்தினர். அவருக்கு ஆபாசமான வார்த்தைகளில் 'மொட்டை கடிதங்கள்' அனுப்புவது; அவரைப் பற்றி வதந்திகளை பரப்புவது; என்று பல வழிகளில் அவருக்குத் தொல்லை கொடுத்தனர். இறுதியாக, 30.10.99 அன்று மாலை வலுக்கட்டாயமாக அவருக்கு மூளையை பாதிக்கக் கூடிய மருந்துகளை, ஒரு போலி மருத்துவர் உதவியுடன் ஊசி மூலம் செலுத்தி, அவரை வேனில் ஏற்றி காஞ்சிபுரம் மருத்துவமனையில் சேர்த்து விட்டனர். அடுத்த நாள் தனக்கு நினைவு திரும்பிய போது, தனது நிலையைக் கண்டு கோபமடைந்த அரிதாஸ், தூசிக்குத் திரும்பி வந்து கிராம மக்களிடம் தனக்கு நேர்ந்த அவலங்களைக் கூறினார்.

ஒரு நேர்மையான, காவல்துறை அதிகாரிக்கு ஏற்பட்ட நிலையைக் கண்டு வெகுண்ட கிராம மக்கள், சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதைத் தனக்குச் சாதகமாக்க நினைத்த கள்ளச் சாராய வியாபாரிகளும் - காவல் துறை புல்லுருவிகளும் தங்கள் அடியாட்களை அனுப்பி, காவல் நிலையத்தைத் தாக்கினர். காவல் துறை வாகனத்தையும் எரித்தனர். பிறகு பழியை மக்கள் மீதும் அரிதாஸ் மீதும் போட்டு விட்டனர்.

இதற்கு டி.எஸ்.பி. ரவியுட பொறுப்பில் இருந்த பாஸ்கரன் என்ப வரும், எஸ்.பி. ரவியும் அடித்தளமா செயல்பட்டுள்ளனர். பிறகு, காவ நிலையத்தைத் தாக்கினார்கள் என் அடிப்படையில், நூற்றுக்கும் மே பட்ட கிராம மக்களும் அரிதாசு கைது செய்யப்பட்டனர். இதி வேடிக்கை என்னவென்றால், ம நிலை பாதிக்கப்பட்டிருக்கிறார் என் அடிப்படையில் அரிதாஸ், வேலூ அரசு 'பென்ட்லான்ட்' மருத்து மனைக்குக் கொண்டு செல்லப்ப டார். 'பென்ட்லான்ட்' மருத்துவமனை யில் மனநோய் சிகிச்சை பிரிவோ ம நோய் மருத்துவரோ இல்லை என்ப அனைவரும் அறிந்த ஒன்றாகும்.

ஆகையால், அரசு தனது தவ



www.padippakam.com
படிப்பகம்

www.padippakam.com

களை மறைக்க ஒரு நேர்மையான அதிகாரி மீது மன நோயாளி என்று பழியைச் சுமத்தி - அவரை மன நோய் துறையே இல்லாத மருத்துவமனையில் சேர்த்திருக்கிறது! அதன் பிறகு அரிதாஸ், சென்னை மத்திய சிறைக்கு மாற்றப்பட்டார். அவர் வேலூர் அரசு மருத்துவமனையில் இருந்தபொழுதோ சென்னை மத்திய சிறைக்கு மாற்றப்பட்டபொழுதோ - அவரைப் பற்றிய விவரங்களை அவரது குடும்பத்தாருக்குத் தெரிவிக்கவில்லை.

இதற்கிடையில் சட்டப் பேரவையில் 19.11.99 அன்று, முறைகேடான முறையில், தமிழக முதலமைச்சர் ஒரு அறிவிப்பை வெளியிட்டுள்ளார். 'அரிதாஸ் மன நோயாளி' என்றும், அதற்காக கடந்த காலத்தில் மருத்துவ சிகிச்சை பெற்றிருக்கிறார் என்றும் அறிவித்த முதலமைச்சர், இது குறித்து டாக்டர். சாரதா மேனன் என்ற மன நல மருத்துவர் தந்த குறிப்புகளையும் சட்டப் பேரவையில் வாசித்தார்.

முதலமைச்சரின் இந்த செயல்பாடு மிகவும் முறைகேடான ஒன்றாகும். ஒருவரின் மருத்துவ சிகிச்சை பற்றிய விவரங்களை, சிகிச்சை தந்த மருத்துவரே கூட நோயாளியின் அனுமதியின்றி வெளியிடக்கூடாது என்று மருத்துவ சட்ட விதிகள் கூறுகின்றன. இதில் சம்பந்தப்பட்ட டாக்டர். சாரதா மேனனும் 'இந்திய மருத்துவ கவுன்சில்' தண்டனைக்கு உட்படுத்தப்பட வேண்டியவர்.

இந்த நாட்டில், மருத்துவ சான்றிதழ் என்பது கத்திரிக்காயை விட எளிதாகக் கிடைக்கக்கூடிய ஒன்றாகும். தாங்கள் எடுக்கும் விடுமுறைக்காக, ஏதாவது பொய்யான காரணத்தைச் சொல்லி மருத்துவ சான்றிதழ் பெறுவது மக்களிடையே மிகச் சாதாரணமாக நடந்துவரும் ஒன்றாகும். மருத்துவர்களும் பணத்திற்காக எந்த விதமான மருத்துவச் சான்றிதழையும் அளிக்கக் கூடியவர்களாக இருக்கிறார்கள். சாதாரண மக்களே தாங்கள் விரும்பும் மருத்துவ சான்றிதழைப் பெறும் பொழுது, தனது தவறை மறைக்க விரும்பும் அரசும், முதலமைச்சரும் தாங்கள் விரும்பிய மருத்துவ சான்றுகளை பொய்யாகத் தருவது எளிய செயலே.

இந்திய குற்றவியல் சட்டம் 84 ஆவது பிரிவின்படி, தான் செய்யும் செயல் தவறானது அல்லது சட்டத்திற்கு எதிரானது என்பதை உணர முடியாதவர்களே மன நோயாளிகளாகக் கருதப்படுவார்கள். இதன்படி, தங்கள் செயல் தவறு என்று உணரக்கூடியவர்கள் மன நிலை பாதிக்கப்பட்டவர்களாக இருப்பினும், தங்கள் செயலுக்கு பொறுப்பேற்க வேண்டியவர்களாக இருப்பதால், இவர்களை மனநோயாளிகளாக சட்டம் கருதுவதில்லை. இதை 'மெக்னாட்டன் விதி' என்று குற்றவியல் மருத்துவம் (Medical Jurisprude-nce) கூறுகிறது.

**முதலமைச்சரின் இந்த செயல்பாடு மிகவும் முறைகேடான ஒன்றாகும். ஒருவரின் மருத்துவ சிகிச்சை பற்றிய விவரங்களை, சிகிச்சை தந்த மருத்துவரே கூட நோயாளியின் அனுமதியின்றி வெளியிடக் கூடாது என்று மருத்துவ சட்ட விதிகள் கூறுகின்றன. இதில் தொடர்புடைய டாக்டர். சாரதா மேனனும் 'இந்திய மருத்துவ கவுன்சில்' தண்டனைக்கு உட்படுத்தப்பட வேண்டியவராவார்.**

மனச் சோர்வு (Depression), மனப் பதட்டம் (Anxiety) போன்ற மன நிலை பாதிப்புகள் என்பன இப்பொழுது மக்களிடையே சாதாரணமாகக் காணப்படுகின்றன. இத்தகைய மன பாதிப்புகளுக்கு மக்கள் மருந்துகள் சாப்பிடுவதும் சிகிச்சை பெறுவதும் மிகவும் சாதாரணமாக ஆகிவிட்டது. இத்தகைய மன பாதிப்புகள் உள்ளவர்களை, பொறுப்பை உணரமுடியாத புத்தி சுவாதீனமற்றவர்கள் என்று கூறிவிடமுடியாது. 'மெக்னாட்டன் விதி'ப் படி, இவர்களை சட்டப்படியும் மன நோயாளிகளாகக் கருத முடியாது.

**மன நோயால் பாதிக்கப்பட்ட பலர், பல துறைகளிலும் முத்திரை பதித்திருக்கிறார்கள். எடுத்துக்காட்டாக, அமெரிக்க நாட்டின் தந்தை ஜார்ஜ் வாஷிங்டன், இசை மேதை பீத்தோவன், அமெரிக்காவில் புகழ் பெற்ற மருத்துவராக விளங்கும் டாக்டர் ஹண்டர் பாட்ச் ஆடம்ஸ், நடிகர் மர்லன் பிராண்டோ போன்றோர் மன நோய்களுக்காக சிகிச்சை பெற்றவர்கள்தாம்! இவ்வாறு பல பெயர்களை அடுக்கிக் கொண்டே போகலாம்.**

ஒரு காலத்தில் மனநோயால் பாதிக்கப்பட்டவர் என்று பத்திரிகைகளில் பரபரப்பாக எழுதப்பட்ட நடிகர் ரஜினிகாந்தை, அரசியல் ஆதரவு தரும் தலைவராக தமிழக முதல்வர் அவ்வப்போது பயன்படுத்திக் கொள்ளவில்லையா? இன்றும் ரஜினிகாந்தை, மக்கள் செல்வாக்குடைய பிரமுகராக பத்திரிகைகள் பார்க்கவில்லையா? அரிதாசை மன நோயாளி என்று ஒதுக்கும் முதல்வருக்கு, ரஜினிகாந்தின் மன நோய் 'ஆன்மீக சக்தியாக' இனிக்கிறது போலும்! ஒரு நேர்மையான தலித் காவல் துறை அதிகாரிக்கு ஆதரவாக, சாதி வேறுபாடின்றி மக்கள் ஒன்றாகத் திரண்டு போராடியிருப்பதை வரவேற்காமல் - ஒடுக்க நினைக்கும் அரசுக்கு சமத்துவபுரம் பற்றிப் பேச அருகதை இருக்கிறதா?

எனவே, சட்ட ரீதியாகவும் மருத்துவ ரீதியாகவும் பார்க்கும் பொழுது, மன நிலை பாதிப்பு இருப்பதே - ஒருவரை பொறுப்பற்றவராகவோ பொறுப்பை உணரமுடியாதவராகவோ ஆக்கிவிடுவதில்லை. கள்ளச்சாராயத்திலிருந்து மக்களைப் பாதுகாக்க வக்கில்லாத தமிழக அரசும் முதலமைச்சரும் - ஒரு நேர்மையான காவல் துறை அதிகாரியை, மன நோயாளி என்று பழி சுமத்தி பொறுப்பிலிருந்து தப்பிக்க நினைப்பது வெட்கக்கேடானது.

பாதிக்கப்பட்ட மக்களையும் நேர்மையான அதிகாரியான அரிதாசையும் பாராட்டிப் பாதுகாக்க வேண்டிய அரசு, அவர்களை கைது செய்து வழக்குத் தொடர்ந்திருப்பது கடும் கண்டனத்திற்குரியது. அரசு உடனடியாக அரிதாஸ் மீதும் தூசி வட்டாரத்து மக்கள் மீதும் தொடரப்பட்டுள்ள அனைத்து வழக்குகளையும் திரும்பப் பெற வேண்டும். அரிதாசைக் கொடுமைப் படுத்தி கள்ளச் சாராயத்திற்கு துணை போன காவல் துறை அதிகாரிகள் மீது கடும் நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும். ●



படிப்பகம்

www.padippakam.com



### தி.மு.க. அரசு வெளியிட்டுள்ள கோமதி நாயகம் அறிக்கை

# உண்மைகளின் படுகொலை

**ஆதவன்**

கொடியங்குளம் கலவரம் பற்றி கோமதிநாயகம் கமிஷனின் அறிக்கையை கருணாநிதி அரசு 24.11.99 அன்று சட்டப்பேரவையில் தாக்கல் செய்துள்ளது. 1995 ஆம் ஆண்டு சூலை மாதம் தொடங்கி பலமாதங்கள் வரை திருநெல்வேலி, தூத்துக்குடி மாவட்டங்களில் - தலித் மக்களுக்கு எதிராக நடத்தப்பட்ட கலவரம் குறித்து விசாரிப்பதற்காக, ஜெயலலிதா அரசு இருந்தபோது நியமிக்கப்பட்டதுதான் இந்த கோமதிநாயகம் கமிஷன். ஓய்வுபெற்ற மாவட்ட நீதிபதி தலைமையிலான ஒரு நபர் கமிஷன், 1996ஆம் ஆண்டிலேயே தனது அறிக்கையை அளித்து விட்டது. இத்தனைக் காலமும் கவனிப்பாரற்றுக் கிடந்த அறிக்கை, இப்போதுதான் வெளி உலகுக்குத் தெரிய வந்துள்ளது.

இந்த அறிக்கையை தி.மு.க.அரசுசட்டப்பேரவையில் தாக்கல் செய்யப்போவது குறித்த 'கிசுகிசுக்கள்' பல நாட்களாகவே பத்திரிகைகளில் உலவிக்கொண்டுதான் இருந்தன. தேவர்களுக்குச் சாதகமான முடிவுகளை அந்த அறிக்கை முன் வைத்திருப்பதால், அதை வெளியிடுவதன் மூலம் தேவர் சாதியினரின் ஆதரவுப் பார்வையைப் பெறமுடியுமென கருணாநிதி எண்ணுகிறார் எனவும் அந்த செய்திகள் கூறிவந்தன. அவற்றை மெய்ப்பிக்கும் வகையில்தான், கருணாநிதி அரசு நடந்து கொண்டுள்ளது.

நாடாளுமன்றத் தேர்தலில் தென் மாவட்டங்களில் படுதோல்வியைச் சந்தித்த தி.மு.க., வரப்போகும் சட்டமன்றத் தேர்தலை எண்ணி நடுங்கிக் கொண்டிருக்கிறது. தேவர்களின் வாக்குகளில் சிறிதளவாவது பெற்றுவிட வேண்டும் என எல்லா உபாயங்களையும் அது கையாண்டு பார்க்கிறது. முத்துராமலிங்கத் தேவரின் பிறந்த நாளை அரசு 'விழாவாக அறிவித்தது; அமைச்சர்களை அந்த விழாவில் பங்கேற்கச் செய்தது; தேவர் பிறந்தநாளையொட்டி தென் மாவட்டக் கலவர வழக்குகளை திரும்பப் பெற்றது என பலவற்றைச் செய்து வருகிறது. அதன் தொடர்ச்சிதான் - 'கோமதிநாயகம் கமிஷனின் அறிக்கை' தாக்கல் செய்யப்பட்ட நடவடிக்கையாகும்.

ஜெயலலிதா தன்னைக் காத்துக் கொள்ள நியமிக்கப்பட்ட கமிஷனின் அறிக்கையை - கருணாநிதி விரும்பியிருந்தால் ஜெயலலிதாவுக்கு எதிராகப் பயன்படுத்தியிருக்கலாம். ஆனால் அவர் அதைச் செய்யவில்லை. மாறாக, தலித் மக்களுக்கு எதிராக அதைப் பயன்படுத்த முயற்சிக்கிறார். தலித் மக்களைக் கேவலப்படுத்துவதில், அ.தி.மு.க.வும் தி.மு.க.வும் கருத்தொற்றுமை கொண்டிருப்பதையே இது வெளிப்படுத்துகிறது. நெல்லைக் கலவரம் தொடர்பாகவும் இதே போன்ற அணுகுமுறையைத்தான் அவை கொண்டிருந்தன.

தேர்தல் ஆதாயத்துக்காகக்கூட தலித் மக்களுக்கு எதையும் செய்துவிடக்கூடாது என்பதில் இந்தத் 'திராவிட; கட்சிகள்' கறாராக இருக்கின்றன. கொடியங்குளம் கலவரத்தை எவரும் அவ்வளவு எளிதில் மறந்துவிட முடியாது. 1995 சூலை 26அன்று, வீரசிகாமணியில் நடைபெற்ற மோதலில் தொடங்கி 1996 மார்ச்சுக்கு மேலும் நீண்டது அந்தக் கலவரம். அதுபற்றி அப்போது டி.ஜி.பி.யாக இருந்த வைகுந்த், முதலமைச்சராக இருந்த ஜெயலலிதாவுக்கு எழுதிய ரகசிய கடிதம் அந்த சமயத்தில் **'தினமணி'**யில் வெளியிடப்பட்டது. அதன் விவரம் வருமாறு:

''செப்டம்பர் 5ஆம் தேதி நான் (வைகுந்த்) கொடியங்குளம் சென்று விசாரித்தேன். எதிரிகளைப்பிடிக்க இந்த கிராமத்திற்குச் சென்ற போலிஸ் டி.எஸ்.பி. மற்றும் தாசில்தாரை மக்கள் அரிவாளைக் காட்டி மிரட்டியதாகவும், வெடிகுண்டு வீச முயன்றதாகவும் கிராமத்தில் நுழையாமல் இருக்க மின்சார வயர்களைப் போட்டதாகவும் போலிசார் தெரிவிக்கின்றனர். இதனால் கூடுதல் போலிசாரை அழைத்துக் கொண்டு கிராமத்திற்குச் சென்ற போலிசார் எதிரிகளைக் கைது செய்துள்ளனர். இந்த நடவடிக்கையோடு நின்றிருந்தால் போலிசாரைப் பாராட்டி இருக்கலாம்.

ஆனால், கிராமத்தில் வீடு வீடாகச் சென்று பொதுமக்களின் உடைமைகளை போலிசார் அடித்து உடைத்துள்ளனர். கல்லூரி மாணவர்களின் சான்றிதழ்களைக் கிணற்றில் வீசியுள்ளனர். கிராமத்திற்குச் சென்றிருந்தபோது, மக்கள் அழுது புலம்பியபடி கூறியது நெஞ்சை உருக்கும் வகையில் அமைந்திருந்தது. போலிசார் உள்நோக்கத்துடன் செயல்பட்டார்கள் என மக்கள் தெரிவித்தனர். ஆனால், வெடிகுண்டு வீச முயற்சி போன்ற கஷ்டங்களை எதிர்கொண்ட போலிசார் கோபமடைந்து, கண்மூடித்தனமாகத் தாக்குதலை நடத்தியுள்ளனர் என்று எனக்குத் தோன்றுகிறது.

இந்தத் தாக்குதல் - சப்கலெக்டர், தாசில்தார் மேற்பார்வையில் நடந்திருக்கின்றது. இது எனக்குக் கவலையை அளிக்கின்றது. போலிஸ் சூப்பிரெண்டன்ட்டைத் தொடர்ந்து விசாரித்ததிலும், மனரீதியாக அவருக்கு நெருக்குதல் கொடுத்ததையும் அடுத்து போலிசார் செய்த அக்கிரமங்களை அவர் ஒப்புக் கொண்டார். இந்நிகழ்ச்சிக்குக் காரணமான, போலிசார் மீதும் அரசாங்கத்தின் மீதும் மக்களுக்கு பெரும் வெறுப்பு ஏற்பட்டுள்ளது.'

என அந்தக் கடிதத்தில் டி.ஜி.பி. வைகுந்த் தெரிவித்திருந்தார். இருதரப்பினர் மீதும் உள்ள சிறு வழக்குகளை திரும்பப் பெற ஆணையிட வேண்டுமெனவும் வைகுந்த் ஆலோசனை கூறியிருந்தார். ஆனால், அ.தி.மு.க. அரசு வைகுந்த் கூறியதை நம்பாமல், கண்துடைப்புக்கு கோமதிநாயகம் கமிஷனை நியமித்தது. அன்று டி.ஜி.பி

> **கோ 'மதியற்ற' கமிஷன் நாயகமே!**
> **தலைவர்களின் சிலைகளை அகற்றினால் சாதிச் சண்டை வராது எனப் பரிந்துரை செய்த நீ, கோயில்களை அகற்றிவிட்டால் மத (வெறி) சண்டை வராது எனப்பரிந்துரை செய்யத் தயாரா?**
>
> சென்னையில் காணப்பட்ட சுவரொட்டியின் வாசகங்கள்



படிப்பகம்

www.padippakam.com

யாக இருந்த வைகுந்த் எழுதிய கடிதத்தில் தெரியவரும் உண்மைகள் எவை? அவற்றை கோமதிநாயகம் மறுக்கிறாரா? என்பது மிக முக்கியமான கேள்வியாகும்.

இந்திய அரசின் உள்துறை அமைச்சகத்தின் 1996-97ஆம் ஆண்டுக்கான அறிக்கையில் வெளியிடப்பட்ட புள்ளிவிவரங்களேகூட, உண்மையைச் சொல்ல போதுமான ஆதாரங்களாக இருக்கும். அந்த அறிக்கையின்படி, அதற்கு முந்தைய ஆண்டுகளைவிட 1996இல் மட்டும் சாதி மோதல்களின் எண்ணிக்கை 34 சதவிகிதம் கூடியுள்ளது. பதிவு செய்யப்பட்ட 282 மோதல்களில், 238 மோதல்கள் தலித் மக்களுக்கும் தேவர்களுக்குமிடையே நடந்தவையாகும். மாநில அரசு அளித்துள்ள புள்ளி விவரப்படி, 1995 ஆகஸ்ட்டுக்கும் 1998 அக்டோபருக்குமிடையில் குறைந்தது 251 பேர் கொலை செய்யப்பட்டுள்ளனர். 1995ஆம் ஆண்டு தமிழக அரசின் புள்ளி விவரம்கூறும் இன்னொரு தகவல், 'தீண்டாமையைப் பிரயோகிப்பதில் 91 சதவிகிதம் பேர் தேவர்களே' என்பதுதான்.

''மாவட்ட கலெக்டர், போலிஸ், எஸ்.பி. ஆகியோர் முன்னிலையில் சுமார் 600 போலிசார் 1995 ஆகஸ்ட் 31அன்று கொடியங்குளத்தைத் தாக்கினார்கள்'' என்ற உண்மையை பி.யு. சி.எல். உண்மையறியும் குழுவின் அறிக்கையும் ஆதாரத்துடன் உறுதிப்படுத்தியுள்ளது.

சூலை 30 அன்று சேத்தூரைச் சேர்ந்த கணேசன் என்ற தலித், சிவகிரியில் கொல்லப்பட்டதிலிருந்து 1996 மார்ச் 13 வரை கொலையுண்டவர்களின் எண்ணிக்கை 56. உண்மைகள் இப்படி இருக்க, அங்கு நடைபெற்றது சாதிக்கலவரமே அல்ல என்று கோமதி நாயகம் குறிப்பிட்டிருப்பது எவ்வளவு பெரிய மோசடி! ''கொடியங்குளத்தில் போலிஸ் அத்துமீறல் இல்லை; அங்கு நடத்தப்பட்ட துப்பாக்கிச்சூடு நியாயமானதுதான்'' எனவும் கோமதி நாயகம் கூறியிருக்கிறார்.

வீரசிகாமணி சம்பவத்தை அடுத்து 1995 சூலை 31இல் சிவகிரியில் சந்திரன் என்ற தலித்தை தேவர்கள் கத்தியால் குத்தினர். ஆனால், தேவர்கள் மீது நடவடிக்கை எடுக்காமல் தலித் மக்கள் மீது துப்பாக்கிச்சூடு நடத்தி - ரவி, ராக்கப்பன், முனியாண்டி, கல்யாண சுந்தரம், வனம் ஆகியோரை சுட்டு வீழ்த்தியது போலிஸ்.

ஆகஸ்ட் 31ஆம்தேதி காலை 25 போலிஸ் வேன்கள் கொடியங்குளத்துக்குள் நுழைந்தன. அவற்றில் போலிஸ்காரர்கள் மட்டுமின்றி, சென்னை அம்பத்தூரை தலைமையிடமாகக் கொண்டு செயல்பட்டு வருகின்ற 'அழகு செக்யூரிட்டி சர்வீசி'ன் அடியாட்களும்இருந்தனர். அந்த கும்பல், மொத்த கிராமத்தையும் கொள்ளையடித்தது; பெண்களை மானபங்கப்படுத்தியது; பார்த்தவர்களையெல்லாம் வெட்டிச் சாய்த்தது; நினைத்த பக்கமெல்லாம் சுடுத்தள்ளியது; 47 பேரைக் கைது செய்து இழுத்துச் சென்றது. போகும்போது குடிநீர்க் கிணற்றில் நஞ்சைக் கலந்துவிட்டுச்சென்றது. இந்த உண்மைகள் பத்திரிகைகளில் வந்தன. கருணாநிதியின் மருமகனுக்குச் சொந்தமான 'சன் டிவி'யிலும் இந்தக் கொடூரம் காட்டப்பட்டது.

அன்று, கொடியங்குளத்தைப் பயன்படுத்தி ஓட்டு கேட்ட கருணாநிதி, இன்று அதையே தலித் மக்களுக்கு எதிராகப் பயன்படுத்துகிறார். வடமாவட்டங்களில் வன்னியர்களும், தென்மாவட்டங்களில் தேவர்களும் இருந்துவிட்டால் போதும் - எதையும் செய்துகொள்ளலாம் எனக் கருணாநிதி நினைப்பதுதான் இந்தத் திமிருக்குக் காரணம்.

கோமதி நாயகம் கமிஷனின் அறிக்கையைக் கிழித்தெறிந்து சட்டப் பேரவைக்குள் நடத்தவேண்டிய போராட்டத்தை மிக நன்றாகவே நடத்தியுள்ளார் டாக்டர் கிருஷ்ணசாமி. அடுத்து சட்டமன்றத்துக்கு வெளியில் நடத்தப்பட வேண்டிய போராட்டங்களைத் திட்டமிட வேண்டும். இதில் தலித் இயக்கங்கள் ஒன்றுபட்டு நிற்க வேண்டும்.

நாடாளுமன்றத் தேர்தலின்போது, பாலூர் பக்கிரி கொலைக்காக அறிக்கை விட்ட ஜெயலலிதா, தேர்தலில் விடுதலைச் சிறுத்தைகள் மூன்றாவது அணியில் சேர்ந்ததும் வாயை மூடிக்கொண்டார். சிதம்பரத்தில் நடைபெற்ற தேர்தல் கலவரங்களையொட்டி, அவர் துவக்கத்தில் ஆர்வம் காட்டவில்லை. இப்போது த.மா.கா. மற்றும் கட்சிகளைத் தம்மோடு சேர்த்துக் கொள்ள வேண்டும் என்பதற்காகவே மீண்டும் வாய்திறந்துள்ளார்.

தலித் அமைப்புகள் ஒன்றை மட்டும் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும். அரசியல் கட்சிகள் நம்மை அவர்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ளவே விரும்புகிறார்கள். இதில் விதி விலக்குகள் இல்லை. தலித் மக்களைப் பொறுத்தவரை, தமது முதன்மையான எதிரிகளான கருணாநிதியும் ஜெயலலிதாவும் எக்காரணம் கொண்டும் இனி வெற்றிபெறும்படி விட்டுவிடக்கூடாது. நம்மை நாம் திடப்படுத்திக்கொள்வதுதான் இப்போது நமது முதல் பணியாகும். தலித் இயக்கங்களின் ஒற்றுமையைக் கட்டியெழுப்ப, கோமதிநாயகம் கமிஷன் அறிக்கையை ஒரு வாய்ப்பாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

**கொடியங்குளமும், மேலவளவும் திருநெல்வேலியும், சிதம்பரமும் நமக்கு அரசியல் பிழைப்புக்கான அடையாளங்கள் அல்ல. அங்கே சிந்தப்பட்ட ஒவ்வொரு துளி ரத்தத்துக்கும், அங்கே பறிபோன ஒவ்வொரு உயிருக்கும் நாம் பதில் தேடியாக வேண்டும். நமது ஒற்றுமையும், போராட்டமும் மட்டும்தான் அந்தப் பதிலை நமக்குத் தேடித்தரும்.** ●

**கோமதி நாயகம் கமிஷனின் அறிக்கையைக் கிழித் தெறிந்து சட்டப் பேரவைக்குள் நடத்த வேண்டிய போராட்டத்தை மிக நன்றாகவே நடத்தியுள்ளார் டாக்டர் கிருஷ்ணசாமி. அடுத்து சட்ட மன்றத்துக்கு வெளியில் நடத்தப்பட வேண்டிய போராட்டங்களைத் திட்டமிட வேண்டும். இதில், தலித் இயக்கங்கள் ஒன்றுபட்டு நிற்கவேண்டும்.**



படிப்பகம்

www.padippakam.com


*With Best Compliments from*

**Saraswathi Engg. Co.**

**Mr. K.A. Krishna Swamy**
21, Kamaraj 3rd Street, Srinivasa Nagar
Padi, Chennai - 600 050



*With Best Compliments from*



**Bharath Transport**

*(Handling & Transport Contractors)*

**Admn. Office :** No. 1, Thathamuthiappan Street, Chennai - 600 001
**Phone :** 522 4182, 522 7966
**Fax No. :** 523 1624


படிப்பகம்

www.padippakam.com



# தமிழர்களின் முன்னோடி

அன்பு பொன்னோவியம்

தமிழகத்தின் புதைக்கப்பட்ட களஞ்சியமாகக் கிடந்த அயோத்திதாசப் பண்டிதரின் சிந்தனைகள், நாம் எண்ணிப்பார்க்க முடியாதளவில் பல நூறு பக்கங்கள் கொண்ட இரண்டு தொகுதிகளாக வெளி வந்திருப்பதை - 'தமிழன்' பத்திரிகையின் மறு பிறப்பாக எண்ணி மகிழ்கிறேன். இது, தமிழினத்திற்கேகூட அதிர்ச்சியுடன் வியப்பூட்டும் நிகழ்வாகத் தெரியக்கூடும் என்று கருதுகிறேன்.

அன்றைய தமிழர் அயோத்திதாசரைத் தனித் தன்மையாளராகப் பார்த்தார்கள். அவர் காலத்திலும் பல பண்டிதர், புலவர், கவிஞர், நாவலர், அவதானிகள், பாகவதர் - பேச்சாளர், எழுத்தாளர் ஆதிதிராவிடர்களிடையே இருந்தார்கள். இருப்பினும், சமுதாயம், சமயம், இலக்கியம், அரசியல், வரலாறு, தொழில், பகுத்தறிவு, சீர்திருத்தம் போன்றவைகளில் ஈடுபாடு கொண்டு - மக்கள் முன்னேற்றத்தில் அக்கறை கொண்டு தொண்டாற்றியதுதான் பண்டிதரை தனித்தன்மை கொண்ட மனிதராக எண்ணத் தூண்டியது எனலாம்.

அயோத்திதாசர், 1875இலிருந்து 1914 வரை விதைத்த முன்னேற்ற சிந்தனைகளின் மறுமலர்ச்சியும் வளர்ச்சியும் - இரட்டைமலை சீனிவாசனார், எம்.சி. ராஜா போன்ற தலைவர்களைப் படைத்து, மக்களுக்குப் பாடுபட வைத்தது என்று தயக்கமில்லாமல் குறிப்பிடலாம். இதுவும் 1965இல் பேராசிரியர் என். சிவராஜ் அவர்கள் காலத்தில் முடிந்து போன சகாப்தமாக எண்ணத்தக்கதாக அமைந்து விட்டது.

மதத்தால் நலிவும் வருண வேறுபாட்டால் அவல நிலையும் - ஆதிதிராவிடர்க்கு ஏற்படக் காரணமாகயிருந்தது, பார்ப்பனீயமே என்ற கருத்து இலைமறை காயாக இருந்து கனிந்தது. இதைப் பொதுமக்கள் கவனத்திற்கு 1900-க்கு முன்பே கொண்டு வந்தது, அயோத்திதாசரின் பேச்சும் எழுத்தும் என்றால் அது மிகையாகாது. அவை ஆதிதிராவிடர்களிடையே தங்களுக்கான அரசியலைப் பேச வைத்தது.

ஆங்கிலேயர் ஆளுமையில் இந்தியர்களுக்கு ஏற்பட்ட நன்மைகளை வரவேற்றும், இந்திய தேசிய காங்கிரஸ் இந்திய மயமாக்கி - சனாதன தர்மத்திற்கு வழிகோலும் போக்கினைத் தாக்கியதன் மூலமும் இவ்வுணர்வு வெளிப்பட்டது. ஆதிதிராவிடர்களின் இந்தச் சிந்தனையின் சாயலில் பிற்காலத்திய திராவிடர் என்போரின் எண்ணமும் வளர்ந்தது என்றால் தவறாகாது.



நூல்: 'அயோத்திதாசர் சிந்தனைகள்' பகுதி I & II
தொகுப்பாசிரியர்: ஞான. அலாய்சியஸ்
பக்கம்: 1,550
விலை: 600/-
வெளியீடு: 'நாட்டார் வழக்காற்றியல் ஆய்வு மய்யம்', தூயசவேரியார் கல்லூரி, பாளையங் கோட்டை - 627 002

**“நவீன இந்தியாவின் மாபெரும் அறிஞர்களுள் ஒருவர் பண்டிதர் அயோத்திதாசர் (1845 – 1914). தமிழ் – பவுத்த மறுமலர்ச்சி இயக்கத்தைத் தோற்றுவித்து தீவிரமாகச் செயல்பட்டவர். காலனியாதிக்கத்தின் இக்கட்டான காலகட்டத்தில் வாழ்ந்த இவர், சமத்துவம், பகுத்தறிவு, நவீனத்துவம் முதலான கொள்கைப் போக்குகளில் – தமிழக அளவில் பெரியாருக்கும் இந்திய அளவில் பேரறிஞர் அம்பேத்கருக்கும் முன்னோடியாக விளங்கினார்.**

**அயோத்திதாசரின் சிந்தனைகள் 1907 முதல் 1914 வரை, ஏழாண்டுகள் அவரால் நடத்தப்பட்ட 'தமிழன்' என்னும் வார இதழில் எழுத்து வடிவம் பெற்றன. இந்நூலின் தொகுப்பாசிரியர், 'தமிழன்' இதழ்கள் அனைத்தையும் தேடிக் கண்டுபிடித்து, பண்டிதரின் எழுத்துக்களை காலவரிசைப்படி – இதழாதாரத்துடன் அரசியல், சமூகம், சமயம், இலக்கியம் என்ற நான்கு பெரும் பிரிவுகளுக்குள் அடுக்கியிருக்கிறார்.”**

சில தென்னக மக்களின் முன்னோடிகளிடையே பார்ப்பனீய ஆதிக்கத்தின் மீது எழுந்த சலிப்பும் வெறுப்பும் தோல்வியும் - தென்னிந்தியரின் நல உரிமையைக் கேட்கத் தூண்டியது. இந்நிலை 1916இல் பிறந்து 1945இல் வளர ஆரம்பித்ததாகும். 1870 வாக்கில் எழுந்த ஆதிதிராவிட சங்கங்கள், சபாக்களை கணக்கில் எடுத்துக் கொள்ளாமற் போனாலும் 1892இல் பதிவு செய்யப்பட்ட 'ஆதிதிராவிட ஜன சபை', 1916இல் பதிவு செய்யப்படாத 'ஆதிதிராவிட மகா ஜன சபை', 1928இல் பதிவு செய்யப்பட்ட 'அகில இந்திய ஆதிதிராவிட மகா ஜன சபை' போன்றவைகளின் சிந்தனைகள் - காலத்தால் முற்பட்டவை என்பதும், அவற்றில் அயோத்திதாசரின் பங்கு சமச்சீர்மையானது என்பதும் கவனத்தில் கொள்ளத்தக்கனவாகும்.

சமுதாய உரிமையையும் முன்னேற்றத்தையும் மட்டுமே எண்ணிப் போராடிக் கொண்டிருந்த ஆதிதிராவிட சபைகளை ஊக்குவிக்கும் வகையில் - பண்டிதரின் தொண்டு அமைந்தது. பஞ்சாயத்து, நகராட்சி, சட்ட மன்றம், நாடாளுமன்றம் போன்றவைகளிலும் தொழில்துறை, கல்வி, விவசாயம், காவல் துறை போன்ற அனைத்துத் துறைகளிலும் பிரதிநிதித்துவம் எல்லா வகுப்பினருக்கும் வழங்கப்பட வேண்டும் என்று அவர்தம் பேச்சிலும் எழுத்திலும் தொடர்ந்து வலியுறுத்திக் கொண்டே வந்தார்.

இந்து, பவுத்தர், கிறித்தவர், இசுலாமியர், ஆங்கிலோ இந்தியர், அய்ரோப்பியர் என்ற அனைவருக்கும் வாய்ப்பளிக்க வேண்டுமென்று 1909லேயே தனது பத்திரிகையில் எடுத்



படிப்பகம்

www.padippakam.com

துரைத்தவர் அயோத்திதாசர் (தமிழன் - 3.2.1909). இது காலத்தால் முந்திய கருத்தாகக் கருதத்தகும்.

அயோத்திதாசரின் பெரு முயற்சியால் சென்னையில் பல பள்ளிகள் தொடங்கப்பட்டன. இலவசக் கல்வி, பகல் உணவு போன்றவை பெற்றதிலும் அவரது பங்கு, பணி மகத்தானதாகும். அவரது காலத்திலும் அதற்கு முன்பும் பின்பும் ஆதிதிராவிடரின் இடைவிடாத முயற்சிகளின் பயனே - இன்றைய ஆதிதிராவிடரின் முன்னேற்றத்திற்குக் காரணம் என்றால் மிகையாகாது. அரசுகளின் அந்தந்தக் கால திட்டங்களால், ஆதிதிராவிடரின் திட்டங்கள் விரிவுபடுத்தப்பட்டு - பயன் கிடைத்திருக்குமானால், அவை அரசுகளின் கடமையும் காலத்தின் கட்டாயமுமாகும் என்று கொள்வது தவறாகாது.

அயோத்திதாசர் போன்ற ஆதிதிராவிட முன்னோடிகளின் சிந்தனைகள் மேலும் பல வெளிவர வேண்டும். வாழ்வாங்கு வாழ அன்பு, அறம், அறிவு, ஒழுக்கம், தியாகம் ஆகியவற்றை போதித்த புத்தரே - சிறந்த சிந்தனையாளரும் அருளாளருமாவார் என்று ஏற்றுக்கொண்ட பண்டிதர் அயோத்திதாசர், தமிழகத்தில் பவுத்தம் வளர வித்தூன்றி அய்ம்பது ஆண்டுகளில் பவுத்தம் தழைத்தோங்கும் என்று கூறிச்சென்றார். பேரறிஞர் அம்பேத்கர் அதைச் செழிக்கச் செய்திருக்கிறார்.

மக்களிடையே பிணக்கும் பகைமையும் ஏற்படுவதற்குக் காரணமாக இருப்பது - கடவுள் நம்பிக்கையும், மதப்பற்றும், சாதி வெறியுமே என்பதில் கருத்து வேற்றுமை இருக்க முடியாது. மக்களுக்குள் மனித நேயம் நிலவி நல்லிணக்கம் ஏற்பட்டுவிட்டால், மதம் தானாகவே மறைந்துவிடும். மத, சாதிக் கலவரங்கள் கடந்தகால வரலாறாக ஆகிவிடும். இதற்கு கடவுள், மத, சாதி தேவையா அல்லது அன்பும் அறிவும் செறிந்த 'மனித நேயம்' தேவையா என்பதுதான் அயோத்திதாசரின் சிந்தனைகளிலிருந்து நமக்குக் கிடைக்கும் பாடங்களாகும். ●

அறிமுகம்

# தனித் தமிழில் முதல் அய்க்கூ

குறுகிய வடிவக் கவிதை, மரபு தமிழ்ச் சூழலில் இருந்தபோதும் தொடக்கத்தில் அய்க்கூ கவிதைகள் புதிய வரவாகவே கருதப்பட்டன. அண்மைக் காலமாகத் தமிழகச் சூழலுக்கேற்ற அய்க்கூ கவிதைகள் எழுதப்படுகின்றன. முழுவதும் தனித் தமிழில் எழுதப்பெற்ற முதல் அய்க்கூ 'தீயின் தாகம்' நூலாக வெளிவந்துள்ளது. 1991-இல் சிறிய வடிவமைப்பில் வெளிவந்து பலத்த வரவேற்பைப் பெற்ற இந்நூல், இப்பொழுது சில கவிதைகளை உடன் சேர்த்துக் கொண்டு இரண்டாம் பதிப்பாக வெளிவந்துள்ளது.



நூல் : 'தீயின் தாகம்'
ஆசிரியர்கள் : சீனு. தமிழ்மணி தமிழ் நெஞ்சன்
விலை : ரூ. 15/-
பக்கம் : 144
வெளியீடு : 'இலக்கியம்' 51-இ, நிலையத் தெரு சண்முகாபுரம் புதுச்சேரி - 9

அய்க்கூ கவிதைகள், பெரும்பாலும் இயற்கையைப் பாடுபொருளாகக் கொண்டே எழுதப்படுகின்றன. சமூகச் சிந்தனையுடைய கவிதைகளும் இயற்கையைக் களமாகக் கொண்டே இயங்கும். ஆனால், இயற்கையைத் துணைக்கு அழைத்தாலும் முழுக்க முழுக்க சமூகச் சிந்தனைகளைக் கொண்டதாகவும் அங்கொன்றும் இங்கொன்றுமாக இயற்கையைக் கொண்டதாகவும் இக்கவிதைத் தொகுப்பு வெளிவந்துள்ளது.

இலங்கைத் தமிழர் வாழ்வைத் தமது ஓட்டுப் பொறுக்கும் அரசியலுக்குப் பயன்படுத்தும் கட்சித் தலைவர்களை ''நீரோக்களைக் காண்கிறோம் இன்றும் / தமிழினத் தலைவரும் தளபதியுமாய் / ஈழம் எரிகிறது'' எனும் கவிதை சாடுகிறது.

இந்திய ஒருமைப்பாடு, இந்தியச் சுதந்திரம் போன்றவற்றை மறுபரிசீலனைக்கு உள்ளாக்கும் பல கவிதைகள் இத்தொகுப்பில் இடம் பெற்றுள்ளன: ''மூவண்ணத் தேசியக் கொடிய / நால் வண்ணமாய் அசைகிறது / ஒரே வண்ணத்தில் செங்கொடி / என்ன நிகழ்ந்துவிட்டது / அந்த 1947 இல் ஆண்டைகள் மாற்றம்'' எனும் கவிதைகள் இந்தியச் சமூகம் சாதி, வர்ண இறுக்கத்திலேயே இயங்கிக் கொண்டிருப்பதையும் ஆள்பவருக்கும் மக்களுக்குமான உறவு, நிலவுடைமை சமூக 'ஆண்டைகள்' அமைப்பிலேயே இருப்பதையும் வெளிப்படுத்துகின்றன.

இந்தியத் தேசியத்திற்கு எதிரான தமிழ்த் தேசியத்தைப் பல கவிதைகள் (தேசிய மயில் இறகு போடாது / பிய்த்துக் கொள்(ல்) வோம் / தேசிய இன விடுதலை) வலியுறுத்துகின்றன. அதே நேரத்தில், பழம்பெருமை பேசித்திரியும் தமிழனையும் கவிதைகள் சுட்டத் தவறவில்லை (முல்லைக்குத் தேர் / மயிலுக்குப் போர்வை / நடைபாதையில் தமிழன்) 'தீயின் தாகம்'போல ஏற்றுக் கொள்ளப்பட்ட அமைப்பை, எதிர்கேள்வி கேட்கும் படைப்புகள், பல மடங்கு பெருகவேண்டியது காலத்தின் தேவை. ●

- முனைவர் கே. பழனிவேலு

# சிதம்பரத்தில் வைத்த நெருப்பு

சிதம்பரம் தொகுதியில் தலித் மக்கள் வாக்களிக்க விடாமல் தடுக்கப்பட்டு - தாக்கப்பட்டதற்குத் திரைமறைவில் நடைபெற்ற சதித் திட்டங்கள், இதை அம்பலப்படுத்தி தலைமை தேர்தல் ஆணையத்திடம் அளிக்கப்பட்ட வாக்குமூலங்கள், பி.யு.சி.எல். உண்மை அறியும் குழுவின் இடைக்கால அறிக்கை மற்றும் தலித் மக்களுக்கு எதிரான தி.மு.க. அரசின் தொடர் அடக்குமுறைகள் பட்டியலிடப்பட்டுள்ளன. ●

**நூலிலிருந்து...**

''அன்று நந்தனை எரித்ததும், இன்று சேரிகளை எரிப்பதும் ஒரே சாதிவெறி நெருப்புதான். ஆயிரமாயிரம் ஆண்டுகளுக்கு முன் சிதம்பரத்தில், நந்தனுக்கு மூட்டப்பட்ட நெருப்பு இன்னும் எரிகிறது. தலித் மக்களின் எழுச்சி, அந்த சாதி வெறி நெருப்பை முழுவதுமாக அணைக்கும். 21 ஆம் நூற்றாண்டு அதைப் பதிவு செய்தே பிறக்கும்.''

நூல் : 'சிதம்பரத்தி[ல்] வைத்த நெருப்பு' சிதம்பரம் தொகுதி தே[ர்]தல் கலவரம் பற்றி[ய] உண்மைத்தகவல்கள்
ஆசிரியர் : ஆதவ[ன்]
பக்கம் : 24 'தலித்
வெளியீடு, அஞ்ச[ல்] பெட்டி : 11, நெ[ய்]வேலி - 1 விலை ரூ.



படிப்பகம்

www.padippakam.com



# வரலாறாய் வாழ்கிறார்...

தமிழ் மறையான்

"உறங்குவது போலும் சாக்காடு உறங்கி விழிப்பது போலும் பிறப்பு"

சத்தியவாணி முத்து அம்மையார் அவர்கள் சுயமரியாதை இயக்கக் காலத்திலும், திராவிடர் கழகத்திலும் தீவிரமாக பிரச்சாரப் பணிகளிலும், கிளர்ச்சிகளிலும் ஈடுபட்டு உழைத்தவராவார். தமிழ் நாடு அமைச்சரவையில் பொறுப்பேற்று திறம்படப் பணியாற்றும் சீரிய சுயமரியாதை வீராங்கனையாகிய அம்மையார்...'' என தந்தை பெரியார் அவர்களால் புகழப்பட்டவரும்;

பாபாசாகேப் டாக்டர். அம்பேத்கர் அவர்கள், தொழிலாளர் அமைச்சராக சென்னை வந்தபோது, அண்ணலுக்கு விழாக்குழு சார்பாக ஆங்கிலத்தில் வரவேற்பு வாழ்த்துமடல் வாசித்தளித்து - வியப்பிலாழ்த்தியதோடு, 'செட்யூல்ட் கேஸ்ட் பெடரேஷனில்' 1943 முதல் 1949வரை மகளிர் தலைவியாகப் பணியாற்றியவரும்; பேரறிஞர் அண்ணா அவர்களோடு தி.மு.கழகம் உருவாகிடத் துணையாக நின்ற அன்னை சத்தியவாணி முத்து அவர்கள், மறைந்தும் வரலாறாய் வாழ்கிறார்.

பொதுவாழ்வில் நீதிக் கட்சி, சுயமரியாதை இயக்கம் மற்றும், திராவிடர் கழகத்தில் 1941 முதல் 49வரை சமூகச் சீர்திருத்தப் பணியில், பாயும் பெண் புலியென சாதிமதச் சாடல்களில் தன்னிகரற்று விளங்கினார். சிறைக்கஞ்சாப் பறவையாகப் பன் முறை சிறை சென்றார். பிறகு அண்ணாவுடன் துணைநின்று தி.மு.கழகம் கண்டார்; பிறகு அமைச்சரானார். 1974இல் கருணாநிதி அமைச்சரவையில் ஆதிதிராவிடர் நலம் மற்றும் சுகாதார அமைச்சராயிருந்தபோது, மய்ய அரசால் தலித் மக்களுக்கு வழங்கும் நிதியை - பிற்படுத்தப்பட்டோர் நலனுக்குப் பயன்படுத்துவதைக் கண்டித்தும், குடும்பநலத் திட்டத்தில் கருத்து முரண்பாடு கொண்டதால் கருணாநிதியால் வெளியேற்றப்பட்டார்.

சமுதாய நலன்காக்க, 1974இல் 'தாழ்த்தப்பட்டோர் முன்னேற்றக் கழகம்' நிறுவினார். 'எனது போராட்டம்' என்னும் தலைப்பில் நூல் வெளியிட்டு தனது நிலைப் பாட்டையும் கருணாநிதியின் செயல்பாட்டையும் விளக்கினார். 1977இல் எம்.ஜி.ஆரால் அழைக்கப்பட்டு அ.இ.அ.தி.மு.க.வில் இணைந்தார். மேலவை உறுப்பினரானார். 1978இல் மாநிலங்களவை உறுப்பினரானார். 19.7.79இல் மய்ய அரசில் சரண்சிங் அமைச்சரவையில் சுகாதார அமைச்சரானார்.



**சத்தியவாணி முத்து**
**15.2.23 - 11.11.99**

மய்ய - மாநில அரசுகளில் பல பெரும் பொறுப்புகளை வகித்து உலக நாடுகளெல்லாம் சென்று - பெண்கள் நலன், சமூக முன்னேற்றம் குறித்துப் பேசி புகழ் சேர்த்துள்ளார். எலிசபெத் ராணியோடு கை குலுக்கியும், போப் பால் அவர்களைச் சந்தித்தும் விருது பெற்றுள்ளார்.

1989இல் மீண்டும் தி.மு.கழகத்தில் இணைந்து, இறுதிவரை சமூகப் பணியாற்றி வந்தார். 15.2.98அன்று 75 அகவை அடைந்து பவள விழா கண்டார். 76ஆம் அகவையினை, சமுதாயத் தலைவர்களால் பெரம்பூரில் விழா எடுக்கப்பட்டு மகிழ்ச்சிக் கடலில் மூழ்கி உணர்ச்சி வயப்பட்டார். 11.11.99 அன்று இறுதி மூச்சு அடங்கப் பெற்று நீள் துயில் கொண்டார். இறுதிச் சடங்கில், தமிழக முதல்வர் கலைஞரும் அமைச்சர் பெருமக்களும், அரசியல் மற்றும் சமுதாயத் தலைவர்களும் பங்கேற்று கண்ணீர் அஞ்சலி செலுத்தினர்.

25.11.99 அன்று அண்ணா நகரில் அன்னையார் வீட்டில் படத்திறப்பு நடைபெற்றபோது, ''இளம் வயதிலிருந்தே சுயமரியாதை இயக்கத்தின் மீது பற்று கொண்டிருந்தார். இந்த இயக்கம் பல வடிவம் பெற்றபோது, எந்த மாறுதலிலும் தனது அடிப்படைக் கொள்கையான சுயமரியாதைக் கொள்கையின் படி வாழ்ந்தவர். தாம் பிறந்த சமூகத்துக்காக மட்டுமின்றி - ஒடுக்கப்பட்ட சமூகம் முழுவதுக்குமாக அவர் பாடுபட்டார்.''

''திராவிட இயக்கத்தில் பல பெண்மணிகள் இருந்தனர். நினைத்துப் பார்க்கப் படுவர்களான வேலூர் ராமாமிர்தம் அம்மையார், டாக்டர் தர்மாம்பாள், நாகம்மையார் என்று நினைத்துப் பார்க்கிற அளவில் நான்காவதாக சேர்க்கப்படத்தக்கவர் சத்தியவாணி முத்து'' - என்று உளமாற புகழ்ந்துரைத்து அன்னையார் படத்தைத் திறந்து வைத்துள்ளார் தமிழக முதல்வர்.

**மக்கள் தமிழக முதல்வரிடம் ஒன்றை எதிர்பார்க்கிறார்கள். வேலூர் ராமாமிர்தம் அம்மையார் பெயரால் கலப்பு மணம் புரிந்த பெண்களுக்கு உதவித்தொகை வழங்குவதுபோல், 40 ஆண்டு காலம் 'விதவை'யாக வாழ்ந்தும் வீட்டில் முடங்கிக் கிடக்காமல் - வீறு கொண்டெழுந்து பெண்கள் நலம் பேணிய அன்னை சத்தியவாணி முத்து அவர்களின் பெயரால், அரசு உதவித்தொகை அறிவித்து ஆண்டுதோறும் 'விதவைப் பெண்களு'க்கு வழங்கிட அரசாணை வெளியிட வேண்டும் என்பதுதான் அந்த எதிர்பார்ப்பு.** ●



படிப்பகம்

www.padippakam.com



*☞ உங்கள் பின்னணி பற்றி கொஞ்சம் கூறுங்கள்?*

👍 நான் தத்துவத்தில் பட்டப்படிப்பு முடித்தேன். ஆர்வார்டு பல்கலைக்கழகத்தில் தத்துவம் பயின்றபோது, சார்த் (Jean Paul Sartre) என்னை மிகவும் ஈர்ப்பவராயிருந்தார். அதன்பின் ப்ரூக்ளின் பல்கலைக்கழகத்தில் மானுடவியல் பயில்கிறேன். அங்கே இரண்டு ஆண்டுகள் தமிழ் கற்றேன். எனது மானுடவியல் ஆய்வு தொடர்பாக ஓர் ஆண்டு லாகூரில் இருந்தேன். அப்பொழுது உருது கற்றுக் கொண்டேன். காலிப், சதத் ஆசன் மண்ட்டோ எனக்கு மிகவும் பிடித்த எழுத்தாளர்கள். லாகூரில் ஒரு வீட்டில் தங்கியிருந்தேன். அவர்கள் வீட்டில் ஆண் குழந்தைகள் பிழைத்திருப்பதில்லையாம். எனவே, தங்களது மகனைப் போல என்னைப் பராமரித்த அவர்கள் எனக்கு எதுவும் ஆகிவிடக்கூடாது என்பதற்காக, பெண்கள் அணிவது போன்ற காதணியை எனக்குப் போட்டுவிட்டார்கள். அவர்களது அன்பின் அடையாளமாக, அதை இப்போதும் நான் அணிந்து கொண்டுள்ளேன்.

*☞ தமிழ்நாட்டுக்கு எது பற்றி ஆராய்வதற்காக வந்தீர்கள்?*

👍 கரகாட்டம் பற்றித்தான் முதலில் எனது ஆராய்ச்சி இருந்தது. கரகம் ஆடுபவர்களை நேரில் சந்தித்துப் பேசவேண்டும் என்பதற்காகவே தமிழ் நாட்டுக்கு வந்தேன். முதலில் ஆட்டம் மட்டும் தான் இருந்துள்ளது. அப்புறம்தான் மாற்றம் ஏற்பட்டு எழுதுவது வந்திருக்கிறது. எழுதுவதன் முக்கியத்துவம் எனக்குத் தெரிந்தது.

திராவிட இயக்கத்தின் வரலாற்றைப் பார்த்தால், எழுத்து முக்கிய பங்காற்றியுள்ளதை உணரலாம். 'சந்திரோதயம்' முதலான அண்ணா துரையின் எழுத்துக்களைக் குறிப்பிட வேண்டும்.

எனது ஆராய்ச்சியின் போக்கில் சிந்து வகைகளைப்பற்றி என் கவனம் திரும்பியது. ராஜா முத்தையா நூலகத்தில் பாதுகாத்து வைக்கப்பட்டுள்ள இருபத்து நான்கு கொலைச்சிந்துகளை நான் படித்தேன். அவை 19ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவை. கொலை பற்றி ஏன் எழுதுகிறார்கள் என்பது முக்கியமான கேள்வி. அதுவும் கிராமியக் கலையில் இதை ஏன் செய்கிறார்கள்? கிராமியக் கலையில் எழுதப்பட்ட உண்மை விஷயம் கொலைச்சிந்து.

அடுத்து 'தினத்தந்தி' நாளேட்டில் கொலை பற்றி எழுதும்போது கையாளப்



## நானா யாவ் ஒபிரி யெ போவா போயாட்டி,

என்ற இயற்பெயர் கொண்ட நானாவின் மூதாதையர்கள், மேற்கு ஆப்பிரிக்க நாடான கானாவைச் சேர்ந்தவர்கள். அப்பா ஒரு பொறியாளர், அம்மா செவிலியராகப் பணி புரிபவர். பல நாடுகளுக்கும் குடி பெயர்ந்து தற்போது அமெரிக்காவில் வசிக்கிறார்கள். ஆண் குழந்தைகளை 'யாவ்' என்று செல்லமாக அழைப்பது அவர்களது வழக்கமாம். 'நானா' என்பது தாத்தாவின் பெயர்.

பிரம்மாண்டமான தோற்றத்தோடும், பார்த்ததும் நண்பராகிவிடும் அன்போடும் இருக்கும் நானா, 'கொலைச்சிந்து' பற்றிப் பேச நவம்பர் 7 அன்று என்னைச் சந்தித்தார். அழகாகத் தமிழில் பேசவும், எழுதவும் செய்கிற நானாவிடம் 'தலித் முரசு'க்காக நேர்காணல் என ஆரம்பித்து, அது நான்கு மணிநேர உரையாடலாக மாறிவிட்டது. அதிலிருந்து ஒரு சிறு பகுதி ...

சந்திப்பு : ரவிக்குமார்

புகைப்படம் : கலைச்செல்வன்

படும் எழுத்துமுறை என்னை மிகவும் ஈர்த்தது. கொலைச்சிந்துவில் கையாளப்படும் முறைக்கும், 'தினத்தந்தி'யில் கையாளப்படும் முறைக்கும் பல ஒற்றுமைகள் இருக்கின்றன. அடுத்து, 'தினத்தந்தி'யில் பொது மக்களின் பேச்சை எழுதுகிறார்கள். இது, 'தினமணி', 'தினமலரி'ல் நடக்கவில்லை. 'ஸ்டைல்' வித்தியாசப்படுகிறது. சொல்லுகின்ற முறை வித்தியாசப்படுகிறது.

ஆக, பொதுமக்கள் பாணி என்ற வகையில் தினத் தந்தி, கொலைச்சிந்து, தலித் எழுத்துக்கள் இவற்றிடையே பொதுவான அம்சங்களை நான் காண்கிறேன்.

*☞ இங்கு நீங்கள் பார்ப்பதைவிட, அமெரிக்க வாழ்க்கை முறை ஏற்றத்தாழ்வற்றதாக, ஜனநாயகபூர்வமான சுதந்திரமானதாக உள்ளதா?*

👍 அப்படிக் கூறமுடியாது. அது மிகவும் தீவிரகதியில் இயங்கும் ஒரு வாழ்க்கைமுறை. நான் அய்ந்துமுறை சிறையில் அடைக்கப்பட்டேன். ஆனால், எந்தக் குற்றத்தையும் நான் செய்யவில்லை. கறுப்பனாக இருப்பதுதான் நான் சிறையில் அடைக்கப்பட்டதற்குக் காரணம். சிறையில் சென்று பார்த்தபோது, அங்கே அடைக்கப்பட்டிருப்பவர்களில் பெரும்பாலானோர் கறுப்பர்களாக இருப்பதை நான் கண்டேன். அவர்கள் வியாபாரிகளாக, அதிகாரிகளாக, மாணவர்களாக பலதரப்பினராக இருந்தனர்.

எனக்கு வெள்ளிக் கிழமையன்று ஒரு தேர்வு இருந்தது. வியாழக் கிழமை சாலையோரம் நடந்து போய்க்கொண்டிருந்தேன். பின்னால் யாரோ என்னை அழைப்பது போலிருந்தது. திரும்பினால் போலிஸ். ''என்ன செய்கிறாய் இங்கே?'' என்று கேவலமான தொனியில் கேட்டார்கள். நானும் அலட்சியமாக பதில் சொல்லிவிட்டு நடந்தேன். அவ்வளவுதான். என்னைக் கைது செய்து சிறையில் அடைத்து விட்டார்கள். கறுப்பர் ஒருவரைக் கைது செய்ய அங்கே காரணம்கூட எதுவும் தேவையில்லை. அந்த அளவுக்குப் பாகுபாடு நிறைந்ததாகவே அமெரிக்க சமூகம் உள்ளது.

கறுப்பர்களை நல்ல கறுப்பர்கள், மோசமான கறுப்பர்கள் என இரண்டுவிதமாக வெள்ளையர்கள் அடையாளப்படுத்துகின்றனர். என்னைப் பார்த்தாலே என் ச... கறுப்பு மாணவர்களுக்குக்கூட அச்சம். ''உன்னைப் பார்த்தால் பயமாக இருக்கிறது'' என்பார்கள். ''நீ அதிகம் புகையிலை போடுகிறாய்'' என்பார்கள். அது ஒரு குற்றமா என்று தெரியவில்லை.



படிப்பகம்

www.padippakam.com

# “வெள்ளை நிறம் என்பது அதிகாரத்தின் அடையாளமாக உள்ளது”

கறுப்பர்கள் தம்மை வெள்ளையர்களோடு ஒப்பிட்டுப்பார்த்து எதையும் செய்யும்படி ஒரு மனநிலை உருவாக்கப்படுகிறது. அப்படிப்பார்க்கும்போது, வெள்ளை நிறம் என்பது அதிகாரத்தின் அடையாளமாக உள்ளது.

ஆராய்ச்சியாளர்கள்கூட இந்தப் பாகுபாட்டிலிருந்து விடுபடவில்லை. கறுப்பர் என்றால் அவர் கறுப்பின மக்கள் பிரச்சனை குறித்துதான் ஆராய்ச்சி செய்ய வேண்டும். அவர் வேறு எது பற்றியும் சிந்திக்கக்கூடாது என்றொரு எண்ணமும் ஆழமாக வேரூன்றியுள்ளது. அதுமட்டுமின்றி, கறுப்பர்கள் எழுதுவதைப் படிப்பவர்களில் தொண்ணூறு சதவிகித மக்கள் வெள்ளையர் என்பதும் குறிப்பிடத்தக்கது.



☞ *கறுப்பர் இலக்கியத்தில் சுயசரிதை முக்கிய பங்கு வகிக்கிறது. அது ஏன் என்று சொல்ல முடியுமா?*

சுயசரிதை என்பதை தன்னைப்பற்றிய ஒரு ஆய்வு என்பதாகவே நான் அர்த்தம் கொள்கிறேன். மேலும், இந்த சுயசரிதைகள் சில வகைமாதிரிகளை உருவாக்கி விடுகின்றன. ஒரு விதத்தில் அது ஒரு தடையாகவும் மாறி விடுகிறது என நான் நினைக்கிறேன்.

கறுப்பர்கள் பற்றி அமெரிக்காவில் நிலவும் கருத்துக்கள் இப்படியான வகைமாதிரிகளின் அடிப்படையில் உருவாக்கிக் கொள்ளப்பட்டவைதான். எடுத்துக்காட்டாக, “கறுப்பர்கள் செக்சில் அதிக நாட்டம் உள்ளவர்களாக இருப்பார்கள்” என்ற கருத்தைக் குறிப்பிடலாம். இது கறுப்பின மக்களைப் பற்றி நிலவுகிற கொச்சையான கருத்தாகும்.

☞ *நீங்கள் பாகிஸ்தானில் இருந்திருக்கிறீர்கள்; இப்போது தமிழ் நாட்டில் இருக்கிறீர்கள். இவற்றுக்கிடையே நீங்கள் காணும் வேறுபாடு என்ன?*

பாகிஸ்தானில் கறுப்பர்களைக் குறிக்க இருவேறு உருது சொற்களைப் பயன்படுத்துகிறார்கள்: ‘சாய்ஃபாம்’, ‘ஹப்ஷி’ என்பவை அந்தச் சொற்கள். அதில் ஒரு சொல் இழிவான முறையில் கறுப்பர்களைக் குறிப்பதாகும். இந்தியாவை எடுத்துக் கொண்டால், வட இந்தியாவில் கறுப்பர்களை நடத்துகிற முறைக்கும், தென்னிந்தியாவில் நடத்துகிற முறைக்கும் வேறுபாடு இருக்கிறது. தென்னிந்தியாவில், குறிப்பாகத் தமிழ் நாட்டில் மரியாதையாக நடத்துகிறார்கள்.

☞ *மார்ட்டின் லூதர் கிங், மால்கம் எக்ஸ் போன்றவர்களின் தற்போதைய பொருத்தப்பாடு என்ன?*

அவர்கள் அங்கே வழக்கொழிந்து போய்விட்டனர். மால்கம் தனது பிரச்சனையை, ஒட்டுமொத்த கறுப்பின மக்களின் பிரச்சனையாக முன் வைத்தார். இது ஒரு சிக்கல். சுயசரிதைகள் எழுப்பும் சிக்கலும் இதுதான்.

☞ *டோனி மாரிசன், மாயா ஆஞ்சலு, ஆலிஸ் வாக்கர் போன்ற எழுத்தாளர்களின் படைப்புகள் குறித்து என்ன கருதுகிறீர்கள்?*

அவர்களெல்லாம் தமது கறுப்புத் தன்மையை (blackness) விற்பவர்கள். காஃப்காவோ, ஆல்பர் காம்யூவோ இப்படிச் செய்யவில்லை. அவர்கள்தமது வெள்ளைத்தனத்தை (whiteness) விற்பதற்காக தமது படைப்புகளை உருவாக்கியதில்லை.

☞ *இந்தியாவில் உள்ள தலித் மக்களது பிரச்சனையை எப்படிப் பார்க்கிறீர்கள்?*

கறுப்பர்களுக்கு வரலாறு இல்லை; அவர்களுக்கு அறிவு இல்லை (Reason) என சார்த் குறிப்பிட்டார். அது மிகவும் சரியானது. வரலாறும் அறிவும் எங்களுக்கு சுமையாக இல்லை. இந்த நிலை, கறுப்பின மக்களுக்கு ஒப்பீட்டளவில் ஒரு சுதந்திரத்தை வழங்கியுள்ளது. தலித் மக்களின் நிலையும் இத்தகையது என்றே நான் நினைக்கிறேன். படிப்பறிவு என்பதுதான் பெரிய வேறுபாடு. கல்வியறிவு பெற்ற தலித் மக்களின் எண்ணிக்கை மிகவும் குறைவாக உள்ளதைக் கவனிக்க வேண்டும். ●

---

சாலையோரம் நடந்து போய்க் கொண்டிருந்தேன். பின்னால் யாரோ என்னை அழைப்பது போலிருந்தது. திரும்பினால் போலிஸ். “என்ன செய்கிறாய் இங்கே?” என்று கேவலமான தொனியில் கேட்டார்கள். நானும் அலட்சியமாக பதில் சொல்லிவிட்டு நடந்தேன். அவ்வளவுதான். என்னைக் கைது செய்து சிறையில் அடைத்து விட்டார்கள். கறுப்பர் ஒருவரைக் கைது செய்ய அங்கே காரணம்கூட எதுவும் தேவையில்லை. அந்த அளவுக்குப் பாகுபாடு நிறைந்ததாகவே அமெரிக்க சமூகம் உள்ளது.

---



படிப்பகம்

www.padippakam.com



# அன்பு + அறிவு + உண்மை = பவுத்தம்

### பவுத்தத் துறவிகளில் ஒருவர்கூட இந்தியர் இல்லை

**சங்கமித்திரை**

பவுத்தம் ஒரு சாத்வீக மார்க்கம். அகிம்சையை மய்யமாகக் கொண்ட ஒரு நெறி; எதிரிக்கும் அன்பு காட்டும் ஓர் முறை; சராசரி மனிதர்களால் பின்பற்ற முடியாத செயலிழந்த - தன்னம்பிக்கை யற்ற மதம் என்று பவுத்தம் பற்றி ஒரு தவறான கருத்து பெரும்பான்மைமக்களிடையே நிலவுகிறது. இது முற்றிலும் தவறான கருத்தாகும்.

வெளிநாடுகளில் தோன்றிய கிறித்துவமும், இஸ்லாமும் இன்று இந்தியாவில் வேர்விட்டு வளமாக வளர்ந்து வருகின்றன. ஒரு கிறித்துவரை அல்லது இஸ்லாமியரை ஓர் அன்னிய நாட்டு மதத்தைப் பின்பற்றுபவர் என்றுஎவரும்குறிப்பிடுவதில்லை. மாறாக, இந்தியாவில் தோன்றி ஆசியாமுழுமையிலும்பரவியுள்ள பவுத்தம் இதுவரை இந்தியாவில் வேர் பிடிக்கவில்லை. பவுத்தர்கள் ஏதோ வெளிநாட்டில் இருந்து வந்தவர்கள் போல பார்க்கப்படுகின்றனர். பவுத்தத் துறவிகளில் இந்தியர் ஒருவரும் இல்லை.

இந்தியாவில்தான் முதல் பவுத்தத் துறவி புத்தர் தோன்றினார். இன்று, உலகமெங்கும் 60.34 லட்சம் பவுத்தத் துறவிகள் உள்ளதாக 'திபெத் மகா போதி சங்கத்தின் புள்ளிவிவரம்' தெரிவிக்கிறது. இதில், புத்தர் தோன்றிய மண்ணில் ஒரு பவுத்தத் துறவிகூட 'இந்தியர்' இல்லாத நிலை வருந்தத்தக்க - சிந்திக்கக்கூடிய ஒரு செய்தியாகும்.

இந்நிலைக்கு என்ன காரணம்? டாக்டர் அம்பேத்கர் சொல்கிறார்: ''ஒவ்வொரு மனிதனுக்கும் அடிப்படையில் உளவியல் ரீதியான அடிமை உணர்வு (mental slavery) பழங்காலந் தொட்டு ஏதோ ஒரு வகையில் ஊட்டப்பட்டுள்ளது.''

சிலவற்றை வெளிப்படுத்த முடியாது; உணர மட்டுமே முடியும். (''There are certain things which cannot be expressed but can only be experienced'') இந்த உணருதல்தான் பவுத்தத்தின் மய்யமாக உள்ளது. தனக்குத்தானே ஒளியாகவும், தன்னை உணர்ந்தவராகவும் பவுத்தர்கள் விளங்க வேண்டும். அச்சங்கொண்ட மனம், தனது துன்பத்தை மற்றவர்களிடம் பகிர்ந்து மட்டுமே பழக்கப்பட்ட மனம், தனது பிரச்சனைகளை இறைவன் களைந்தெறிவான் என்று சிந்தித்து வாழ்ந்து வந்த மனம், தெளிவடைய ஒரே வழி, சுயமாக சிந்திப்பது மட்டும்தான். மனிதன் பகுத்தறிவு பெற வேறு வழி இருப்பதாகத் தெரியவில்லை.



டாக்டர் அம்பேத்கர் அவர்கள் கைப்பட வரைந்த புத்தர் ஓவியம்

''அறிவியல்எங்குமுடிவடைகிறதோ, அங்கு தத்துவம் பிறக்கிறது.'' என்றார் புத்தர். இந்தியாவில் மதரீதியான தத்துவஞானிகள் அதிகம் தோன்றியுள்ளனர். இந்தியா அறிவியல் ரீதியான முன்னேற்றம் அடைய முடியாமல் போனதற்கு இதுதான் அடிப்படைக் காரணம்.

மனிதனை சுயமாகச் சிந்திக்கச் சொன்ன 'சமயரீதியான' ஒரே மனிதன் புத்தன் மட்டுமே. எது பகுத்தறிவிற்கு முரணானதோ அது பவுத்தம் இல்லை. பகுத்தறிவு பவுத்தத்தின்ஓர்வெளிப்பாடு. பவுத்தம் புத்தர் மட்டுமே ஏற்படுத்தியதல்ல.Buddhism is not originated **from** Buddha. But it is originated **through** Buddha. புத்தர், பவுத்தத்திற்கு ஓர் வரையறை தந்துள்ளார். பவுத்தம் என்பது அறிவு - உண்மை - அன்பு ஆகியவை இணைந்த ஓர் கூட்டுக் கலவையாகும். இந்த அறிவை புத்தர் வலியுறுத்தியதால்தான் புத்தரை அம்பேத்கர், ''ஓர் சமூக விஞ்ஞானி'' எனக் குறிப்பிடுகிறார்.

அறிவியல் கருத்துக்கள் தொடர்ந்து ஆய்வுக்கும், மறு ஆய்வுக்கும் புகுத்தப்படுவது போல, புத்தரின் கருத்துக்கள் - பவுத்தக் கருத்துக்கள் ஆய்வுக்கும் மறு ஆய்வுக்கும் உட்படுத்தப்பட வேண்டும். பவுத்தத்தில் 'புனிதம்' என்று எதுவும் இல்லை. மறுபரிசீலனையை புனிதம் தவிர்த்து விடுகிறது. எனவே, புனிதம் என்ற போர்வையைப் போர்த்தி, பவுத்தக் கருத்துக்களை கடவுள் கோட்பாடுகள் நிறைந்த மதமாக ஒருபோதும் மாற்றிவிடக்கூடாது.

இதுபோன்ற புரட்சிகரக் கருத்துக்களைச் செவியுற்ற மன்னர்கள்கூட புத்தரைப் பின்பற்றத் துவங்கிவிட்டனர்.



படிப்பகம்

www.padippakam.com

இதனால் நாட்டை ஆள மன்னர்கள் இல்லாது போனார்கள். அன்னிய நாட்டினர் நாட்டைக் கைப்பற்றி ஆண்டதன் விளைவாக, 'இந்தியக் கலாச்சாரம்' சீர்கேடடைந்தது என்று களப்பிரர்கள் காலத்தை வரலாற்றாய்வாளர்கள் கூட குற்றம் சுமத்துகின்றனர்.

ஆனால், களப்பிரர்கள் காலத்தில் பவுத்தம் தழைத்தோங்கியதால்தான் அந்த காலத்தை ''இருண்ட காலம்'' என வரலாற்றாசிரியர்கள் குறிப்பிடுகின்றனர். இதற்கு அடிப்படைக் காரணம், அனைத்து வரலாற்று ஆசிரியர்களும் அடிப்படையில் பார்ப்பனீயச் சிந்தனையாளர்களே. பார்ப்பனீயத்தை பவுத்தம் எதிர்த்ததால், அந்த பவுத்தம் தழைத்த காலத்தை - 'இந்துத்துவ' வரலாற்று ஆசிரியர்களால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை.

எனவேதான், களப்பிரர்கள் காலம், போதுமான அளவு மக்களிடையே பேசப்படவில்லை. பார்ப்பனர்கள் தங்களது வரலாற்றைத் தவிர்த்தவைகளில் ஆர்வம் காட்டாததால்தான் - சிந்து சமவெளி - அரப்பா நாகரீகங்களைக்கூட வெளிநாட்டினரான சர் ஜான் மார்ஷல் குழுவினர் ஆராய வேண்டியஅவசியம் ஏற்பட்டது.

மெகஸ்தனிஸ், யுவான் சுவாங், பாகியான் போன்றவர்கள் இந்தியாவிற்கு வந்து இந்திய வரலாற்றை எழுதவேண்டியிருந்தது. இவர்கள் இந்தியாவிற்கு வந்ததால்தான், நமக்கு உண்மையான வரலாறு கிடைத்தது. யுவான் சுவாங் மற்றும் பாகியான் போன்றோர்/ இந்தியாவில் உள்ள பவுத்தத் தலங்களைக் காணவும், பவுத்த நூல்களைத் திரட்டவும்தான் இந்தியாவிற்கு வந்தனர். இந்தியாவில் பார்ப்பனர்கள் பவுத்தத்தை சீர்குலைக்க பலவழிகளில் திட்டமிட்டு செயல்பட்டு வந்ததையும், 'பிறவி பவுத்தர்'களான இம்மண்ணின் தொல்குடி மக்கள் சேரி என்னும் சிறைகளில் அடைபட்டு - பார்ப்பனர்களையும் அவர்களின் கடவுள் கருத்துகளையும் எதிர்த்துப் போராடியதையும் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளனர்.

மேக்ஸ் முல்லரின் வரலாற்றுப் பணியும் இங்கு நினைவு கூறத்தக்கது. இவரும் இந்தியரல்லர். இந்திய வரலாற்றின் பெரும் பங்கை இவர் எழுத முயற்சித்துள்ளார். அதற்காக சமஸ்கிருதம் கற்றுள்ளார். பார்ப்பனர்கள் எப்படி எல்லாம் தலித் மக்களுக்கு எதிராக - கருத்தியல் ரீதியாகவும், வாழ்வியல் ரீதியாகவும் செயல்பட்டு வந்தனர் என்பதைத் தெளிவாக ஆராய்ந்துள்ளார். வீரமாமுனிவர் என்ற கால்டு வெல், ஜியூ போப் போன்றோர் தமிழகத்திற்கு வந்து, தமிழை ஆழக்கற்று பல தமிழ் ஆராய்ச்சிக் கட்டுரைகளை எழுதியுள்ளார்கள்.

இன்று, பவுத்தம் இந்தியாவில் ஓரளவிற்காவது இருக்கிறது என்றால், அதற்குக் காரணம் புரட்சியாளர் அம்பேத்கருக்கு அடுத்தபடியாக, மேற்சொன்ன வரலாற்று ஆசிரியர்கள் பங்கு வகிக்கின்றனர். இந்தியரல்லாத அனைத்து வரலாற்றாசிரியர்களும், இந்தியாவை பவுத்தர்கள் நிறைந்த நாடாகவும், இந்த பகுத்தறிவுள்ள பவுத்தத்தை பார்ப்பனர்கள் ஊடுருவி சீர்குலைத்ததைப் பற்றியும் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளனர்.

இந்தியாவைத் தவிர வேறெந்த நாடுகளிலும் சாதி இல்லை; இந்துத்துவம் இல்லை; பார்ப்பனியம் இல்லை. அதனால்தான் பவுத்தம் அங்கு உயர்வாக ஏற்றுக் கொள்ளப்படுகிறது. இந்தியாவில் சாதியும் 'இந்துத்துவா'வும் உள்ளது. இது இருக்கும் வரை பவுத்தம் வளராது. பவுத்தம் தழைக்கும்போது 'இந்துத்துவம்' அழிந்துவிடும். •

## ''யாருங்க இப்பல்லாம் ஜாதி பாக்கறாங்க''

### 'தனிக்குவளைத் தமிழர்கள்'

ஒட்டன்சத்திரம் ஏரியாவில், சுமார் பத்துக் கிராமங்களுக்கு எங்கள் சங்கத்தினரோடு போனேன். இங்கெல்லாம் தீண்டாமைக் கொடுமை கொடூரமாக வேரூன்றிப் போயிருப்பதை நேரில் பார்க்கவே என்னை அழைத்துப் போனார்கள். கொசப்பட்டி என்ற கிராமத்திலுள்ள காளியம்மன் கோயிலில் உள்ள கண்ணாடியில், தாழ்த்தப்பட்ட மக்கள் பார்க்கக் கூடாது என்று சொல்லிப் பெரும் பிரச்சனை நடந்திருக்கிறது. அப்பியம்பட்டியில் உள்ள தாழ்த்தப்பட்ட மக்களுக்கு, அங்கே முடி வெட்டி விடுவதில்லையாம்! அதற்காகப் பத்து ரூபாய் செலவழித்து, வேறொரு ஊருக்குப் போக வேண்டுமாம். பெரும்பாலான கிராமங்களில் இரண்டு டம்ளர் முறை இன்றும் உள்ளது. எனக்கு எவர்சில்வர் டம்ளரில் டீ கொடுத்த கடைக்காரர், என்னோடு வந்த அந்த ஊரைச்சேர்ந்த ஒருவருக்குக் கண்ணாடி டம்ளரில் கொடுத்தார்.

ஒரு கடையில், தாழ்த்தப்பட்ட பெண் ஒருவருக்கு எவர்சில்வர் டம்ளரில் டீ கொடுக்கச் சொன்னேன். நாங்கள் கூட்டமாக இருப்பதைப் பார்த்து, எவர்சில்வர் டம்ளரில் கொடுத்தார். கடை முன்னால் இருக்கும் பெஞ்சில் தாழ்த்தப்பட்டோர் உட்காரக்கூடாதாம்! அந்தப் பெண்ணை பெஞ்சில் உட்காரச் சொன்னோம். அந்த பெஞ்சில் உட்கார்ந்து, எவர்சில்வர் டம்ளரில் டீ குடித்தபோது, அந்தப் பெண்ணின் முகத்தைப் பார்த்தேன். ஒரு மடக்குக் குடித்தவுடன், அந்தப் பெண்ணுக்குக் குபுக்கென்று கண்ணீர் வந்துவிட்டது. அதைப் பார்த்ததும் நானும் உணர்ச்சிவசப்பட்டு விட்டேன். எவ்வளவு பெரிய கொள்கைகள் பேசினாலும் அதைப் பார்த்ததும் நெகிழ்ந்து போனேன்.

– வாசுகி, *'அனைத்திந்திய ஜனநாயக மகளிர் சங்கம்'– 'ஆனந்த விகடன்' 14.11.99*

காஞ்சிபுரம் மாவட்டத்திலுள்ள கொங்குரை (பஞ்சாயத்து அலுவலகம் அருகில், அரசு ராட்டிணம் கிணறு அருகில், பொன்னியம்மன் கோயில் அருகில் உள்ள டீக்கடை), வடமணிபாக்கம் (ஒரத்தி - திண்டிவனம் போக்குவரத்துச்சாலை கூட்டுறவு வங்கி அருகில் உள்ள டீ கடை), சென்னேரி (போக்குவரத்து சாலையில் பங்க் கடை இணைப்பு அருகில் உள்ள டீ கடை), கீழ்செம்பேடு (பள்ளி அருகில், நடுத்தெரு) ஆகிய கிராமங்களில் இன்றளவும் தலித் மக்களுக்கென தனி டம்ளர்தான் கொடுக்கப்படுகிறது. இது குறித்து மதுராந்தகம் தாசில்தாருக்கும், காஞ்சிபுரம் மாவட்ட வருவாய்த் துறை அலுவலரிடமும் (டி.ஆர்.ஓ) புகார் அளிக்கப்பட்டும் - இதுவரை எந்தவித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை.

– கன்னியம்மாள்
*'மகளிர் சக்தி இயக்கம்' - மாமண்டூர்*



படிப்பகம்

www.padippakam.com


*With Best Compliments From*

# SHRI. SAKTHI AGENCIES
# MARICES & COMPANY

**Distributor Pepsi**

**4, II Street, Veerapandi Nagar**

**Chennai - 600 094**


படிப்பகம்

www.padippakam.com



# தலித்தியமும் உலக முதலாளியமும்

**எஸ்.வி. ராஜதுரை**

பார்ப்பனர் ஆதிக்கத்திற்கும் பார்ப்பனிய சாதிய அமைப்புக்கும் எதிராக ஒடுக்கப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்களின் போராட்டம் - ஆயிரக்கணக்கான ஆண்டுகளாகவே வரலாற்றில் பல்வேறு வடிவங்களில் நிகழ்ந்துள்ளது. புத்தரைத் தொடக்கப் புள்ளியாகக் கொண்டோமேயானால், சாதி ஒழிப்புப் போராட்டமும் அத்தகைய நீண்ட வரலாறுடையதுதான்.

இருப்பினும், சாதி ஆதிக்கத்திற்கு எதிரான நவீனகால ஒழுங்கமைக்கப்பட்ட வடிவத்தில் எதிர்ப்பு இயக்கம் உருப்பெற்றது - பிரிட்டிஷ் காலனி ஆதிக்கச் சூழலில்தான். பார்ப்பனர் ஆதிக்கத்திற்கும் சாதி அமைப்புக்கும் எதிராக, மராட்டியத்தில் ஜோதிபா புலே தொடங்கிய இயக்கம், காலப்போக்கில் பார்ப்பனரல்லாத சூத்திர சாதிகளின் இயக்கமாக மாறியதுடன், அந்த இயக்கத்தைச் சேர்ந்த கணிசமான பகுதியினர் 'தேசிய நீரோட்டத்'தில் கலந்து விட்டனர்.

தமிழகத்தில் பார்ப்பனரல்லாதார் இயக்கம் என்று சொல்லப்படும் நீதிக் கட்சி தோன்றுவதற்கு முன்பேயே தலித் அமைப்புகள் தோன்றியிருந்தன. சாதி ஆதிக்கத்தின் நவீன பரிமாணங்களைத் தத்துவ வகையிலும் நடைமுறையளவிலும் எதிர்த்து நின்ற முன்னோடிகளில் தலைசிறந்தவராக அயோத்திதாசர் விளங்கினார்.

காலனியாதிக்கச் சூழலில் கிடைத்த அரசியல் அதிகார வாய்ப்புகளைப் பயன்படுத்திக் கொள்ள, பார்ப்பனரல்லாதார் இயக்கம் முன்வந்தபோது, அதனுடன் அன்றைய தலித் தலைவர்களும் உற்சாகத்துடன் ஒத்துழைக்க முன்வந்தனர். எனினும், சில குறிப்பிட்ட நிகழ்வுகளையொட்டி அந்த இயக்கத்தில், பார்ப்பனரல்லாத சூத்திர சாதியினருக்கும் தலித் மக்களுக்குமிடையே விரிசல் ஏற்பட்டது.

அந்த விரிசலுக்கு அடிப்படைக் காரணம், ஏணிப்படிபோல் ஒவ்வொருவரிடமும் தீண்டாமை உணர்வும் நடைமுறையும் இருப்பதுதான் என்பதை உணர்ந்த பெரியார், நீதிக் கட்சிக்கு உறுதுணையாகவும் ஆனால் அதனை விடப் பண்புவகையில் முற்போக்கானதும், தலித் விடுதலை என்பதை பிற அனைவரது விடுதலைக்கான முன்நிபந்தனையாகவும் நிறுத்தி - சுயமரியாதை இயக்கத்தைத் தொடங்கினார்.

சுயமரியாதை இயக்கம் இருந்த காலத்திலேயே பல்வேறு தலித் அமைப்புகள் இருந்தன என்றாலும், ம.சிங்காரவேலர் குறிப்பிட்டது போல, ''பல்லாயிரக்கணக்கான தாழ்த்தப்பட்டோர் தங்கி இளைப்பாறுவதற்கான மரநிழலாக'' சுயமரியாதை இயக்கம் விளங்கியது. இதனை 1929 ஆம் ஆண்டு தஞ்சாவூரில் வெளியிடப்பட்ட ஒரு தலித் பாட்டுப் புத்தகத்திலுள்ள சில வரிகள் மெய்ப்பிக்கும். ஒரு பார்ப்பனப் பெண்ணுக்கும் பறையர் குலப் பெண்ணுக்கும் நடப்பதாகச் சொல்லப்படும் சண்டையில் - தலித் பெண்ணின் கூற்றாகப் பாடலாசிரியர் எழுதுகிறார்:

''தினசரி வருகின்ற திராவிடன் குடியரசும் ஜெயம் பெறும் **ஜஸ்டிஸ்** செல்வக்குமரனும் கிடைக்கும் நாடார் குல சூத்திரனும் கூட, கோடை இடி போலக் குமுறும் **தமிழனும்** இன்னமும் ஏற்றம் கிடைக்கின்ற சிங்கப்பூர் இயலும் முன்னேற்றமும் பிரசண்ட மகாவிகடன் பெயர் போன ரிவோல்டு பத்திரா பதிபர்கள் பிரசாசிப்பதையும் பார்த்தேன். தீர ஜெயம் கொட்டும் திரு ராமசாமியார் செப்பும் மொழிகளை நான் சிரமேற்கொண்டிருக்கேன். விடமாட்டேன் நானே, உன் வேத புராணம் எல்லாம் தடுமாட்டம்தானே.''

இங்கே தடியெழுத்தில் உள்ள வார்த்தைகள், அன்றைய பார்ப்பனரல்லாதார் - சுயமரியாதை இயக்க ஏடுகளின் பெயர்களாகும். ராமசாமியார் என்பது பெரியார் என்பதைச் சொல்லத் தேவையில்லை.

எனினும், காலப்போக்கில், மராட்டியத்தில் தலித் மக்களுக்கான சுயமான அமைப்பு ஒரு வரலாற்றுத் தேவை என்பதை உணர்ந்து, அங்கு அதனை உருவாக்கிப் பின்னர் - இந்தியா முழுவதிலுமுள்ள தலித் மக்களைத் தன்பால் ஈர்த்த - அண்ணல் அம்பேத்கரின் தாக்கம், தமிழகத்திலும் ஆழமாகப் பதிந்தது.அனைத்திந்திய அளவில் தலித் மக்கள் தம்மைத்தாமே ஒழுங்கமைத்துக்கொண்டு இயங்க வேண்டிய வரலாற்றுத் தேவைக்கு - ஒரு துடிப்பாற்றல் மிக்க, தத்துவ அடிப்படையையும் விரிந்த உலகப் பண்பையும் கொண்ட ஒரு இயக்க வடிவத்தை வழங்கினார் அம்பேத்கர்.

புலே, அம்பேத்கர், பெரியார் ஆகியோரின் இயக்கங்களின் சொல்லாடல்களில் மதம், குறிப்பாக இந்துமதம், இந்துக்கடவுள்கள் எனச் சொல்லப்படுபவை தாக்குதலுக்

**காலனியாதிக்கச் சூழலில் கிடைத்த அரசியல் அதிகார வாய்ப்புகளைப் பயன்படுத்திக் கொள்ள, பார்ப்பனரல்லாதார் இயக்கம் முன்வந்தபோது, அதனுடன் அன்றைய தலித் தலைவர்களும் உற்சாகத்துடன் ஒத்துழைக்க முன்வந்தனர். எனினும், சில குறிப்பிட்ட நிகழ்வுகளையொட்டி அந்த இயக்கத்தில், பார்ப்பனரல்லாத சூத்திர சாதியினருக்கும் தலித் மக்களுக்குமிடையே விரிசல் ஏற்பட்டது.**



படிப்பகம்

www.padippakam.com

கான முதன்மையான குறியிலக்காக இருந்தன. காரணம், மனிதர்களை சாதிகளாகத் தனித்தனியாகக் கூறுபடுத்தி, ஒவ்வொரு கூறையும் மற்றொரு கூறிலிருந்து அன்னியப்படுத்தி, அதே சமயம் எல்லாக்கூறுகளையும் ஒன்றோடொன்று பிணைத்து வைத்திருக்கும் சாதிய அமைப்புக்கு 'தெய்வீக ஒப்புதலை' இந்து மதம் வழங்குவதுதான்.

சாதி அமைப்பு, அந்தந்த சாதியைச் சேர்ந்தவர்களுக்கு அவரவருக்குள்ள சாதித் தொழிலைக் கற்பித்து வழங்குவதன் மூலம் அவர்களுக்குப் பொருள்வகையான 'பாதுகாப்பை' உறுதிசெய்கிறது. அதே சமயம், மேல் - கீழ் வரிசை என்பது முடிவில்லாமல் நீள்வதால், ஒவ்வொருவரும் மற்றவருக்கு மேம்பட்டவராகத் தன்னை கருதிக்கொள்வதற்கான உளவியல் வாய்ப்பைத் தருகிறது. தாழ்த்தப்பட்ட, தீண்டத்தகாதார் எனச் சொல்லப்படுகிற சாதிகள்கூட இந்த மேல் - கீழ் வரிசையையும் மனப்பான்மையையும் தழுவியுள்ளன.

இந்த சாதிஅமைப்புக்கு சமய - கருத்தியல் அடித்தளம் இருப்பதால், அதற்கு எதிரான போராட்டக் கருத்துகளும்கூட, சமயவடிவத்திலேயே வெளிப்படுவதை வரலாறு நெடுகக் காணலாம். பவுத்தம், சமணம் தொடங்கி மத்திய காலத்தில் பக்தி இயக்கம் ஊடாக - இருபதாம் நூற்றாண்டுவரை, சாதி எதிர்ப்பு இயக்கம் சமய வடிவங்களில் வெளிப்பட்டது. கேரளத்தில் நாராயண குருவின் இயக்கம், மத்தியப் பிரதேசத்திலுள்ள சட்டிஸ்கர் பகுதியிலுள்ள சாமர் சாதியினரின் 'சத்னாமி' இயக்கம் போன்றவற்றிலிருந்து தொடங்கி அண்ணல் அம்பேத்கரின் பவுத்த நெறி தழுவுதல் வரை இந்தப் போக்கினைக் காணலாம்.

புலே, மாற்று மதம் என்பதை வரையறுக்கவில்லை என்ற போதிலும் - பாலி மன்னன் வழிபாடு, எல்லாருக்கும் பொதுவான ஒரு தெய்வக் கொள்கை போன்றவற்றை முன்வைத்தார். இந்து மதத்திற்கு மாற்றாக, சில சமயம் இஸ்லாத்தையும் சில சமயம் பவுத்தத்தையும் பரிந்துரைத்த பெரியார், எந்தவொரு மாற்று சமயத்தையும் ஏற்றுக் கொள்ளாதவராக இருந்த போதிலும் 'மதம்' என்பது அவரைஉலுக்கிக் கொண்டே இருந்தது.

**சாதி அமைப்புக்கு சமய - கருத்தியல் அடித்தளம் இருப்பதால், அதற்கு எதிரான போராட்டக் கருத்துகளும்கூட, சமய வடிவத்திலேயே வெளிப்படுவதை வரலாறு நெடுகக் காணலாம். பவுத்தம், சமணம் தொடங்கி மத்திய காலத்தில் பக்தி இயக்கம் ஊடாக - இருபதாம் நூற்றாண்டுவரை, சாதி எதிர்ப்பு இயக்கம் சமய வடிவங்களில் வெளிப்பட்டது.**

ராமன் வழிபாட்டுக்குப் பதிலாக, ராவணன் வழிபாட்டை வற்புறுத்தினார் பெரியார். எனினும், மேற்சொன்ன அனைத்து சாதி எதிர்ப்பு இயக்கங்களுமே மநுநீதி மீதான தமது ஆழமான வெறுப்பை வெளிப்படுத்தி, மாற்று நம்பிக்கை முறைகளை அல்லது நெறிகளை வலியுறுத்தியது. சுருக்கமாகக் கூறினால், கருத்தியலுக்கு மிகுந்த அழுத்தம் கொடுத்தது அவற்றின் பொதுக்கூறுகளில் ஒன்றாகும்.

தலித் மக்களைப் பொறுத்தவரை, மாற்றுச் சமயம், மதம் மாறுதல் என்பது பார்ப்பனீய இந்து சாதியக் கட்டமைப்பு என்ற நுகத்தடியிலிருந்து விடுபட்டு, மனித கவுரவத்தை மீட்டிட முயல்வதற்கான ஒரு வழிமுறையாகத் தென்பட்டிருக்கிறது. 'இந்தியாவில் உள்ள சாதியக் கட்டமைப்பு அப்படியொன்றும் இறுக்கமானதல்ல, மாறாக நெகிழ்ச்சித்தன்மை கொண்டதாகும்' என்று சிலர் தொடர்ந்து கூறிவரும் போதிலும், பிரிட்டிஷார் வருகை வரை - இந்தியாவின் உற்பத்திச் சக்திகளிலோ அல்லது உற்பத்தி உறவுகளிலோ சாதியக் கட்டமைப்பு சிறிதளவேனும் மாற்றத்தைக் கொண்டு வரவில்லை.

ஓரளவு சுயாதீனமாக விளங்கிய கிராமங்கள் இறுகிப்போயிருந்தன. முஸ்லிம் படையெடுப்பாளர்கள்தான் இந்திய சமுதாயத்திற்கு, முதன் முதலாக கலாச்சார அதிர்ச்சியைத் தந்தவர்களாக இருந்தனர். கருத்தியல் என்ற அளவில், இஸ்லாம் தொடக்கத்தில் எல்லா இந்தியர்களையும் சமமாகவே கருதியது. ஆனால், முஸ்லிம் ஆட்சியாளர்களின் அரசியல், பொருளாதாரத் தேவைகளோ, இந்திய சமுதாயத்தில் நிலவிய சாதிய வேறுபாடுகளைத் தக்க வைத்துக் கொள்ளவே விரும்பின.

எனவே, பார்ப்பனீய சாதியக் கட்டமைப்பு பெரிதும் மாற்றமடையாமல் இருந்ததுடன், இந்தியாவில் வளர்ச்சியடையத் தொடங்கிய இஸ்லாமிய சமுதாயத்தின் மீதும் தனது தாக்கங்களைப் பதித்தது. ஆயினும் கூட, முஸ்லிம் படையெடுப்பாளர்களின் வருகை, அவர்களது ஆட்சி, இஸ்லாமிய சமுதாயத்தின் வளர்ச்சி ஆகியன - கிராமங்களுக்கும் நகரங்களுக்கும் வெளியே இருந்த 'தீண்டத்தகாதவர்கள்' தம் சமூக இழிவுநிலைகளிலிருந்து விடுபடவும் - சமூக, பொருளாதார ஏற்றங்களைப் பெறவும் வாய்ப்புகளைத் தந்தன.

முஸ்லிம் மன்னர்களின் ஆட்சியின் போதுதான், நகரங்களின் வாயில்கள் தீண்டத்தகாதோருக்குத் திறந்துவிடப்பட்டன. தீண்டத்தகாதவர்கள், சாதி அமைப்பால் தங்களுக்கென வரையறுக்கப்பட்டிருந்த தொழில்களிலிருந்து விடுபட்டு வெளியேறவும், ஏன் வாளேந்தவும் வாய்ப்பு ஏற்பட்டது. எனினும், ஒரு ஒழுங்கமைக்கப்பட்ட சமுதாய இயக்கத்தின் வழிகாட்டுதலின் பேரில், அந்த மதமாற்றம் நடந்ததா என்பது ஆராய்ச்சிக்குரியது.

முஸ்லிம் மன்னர்களின் ஆட்சி, வளர்ச்சியடைந்த நிலப்பிரபுத்துவத்தினைத் தனது வலிமையான அடித்தளமாகக் கொண்டிருந்தது. அது, பார்ப்பன புரோகித ஆதிக்க உற்பத்தி முறையைவிட பன்மடங்கு மேன்மையானதாகும். எனினும், பிரிட்டிஷாரோ, நிலப்பிரபுத்துவத்தைவிடத் திறன்கூடிய உற்பத்தித் தொழில் நுட்பம், முதலாளித்துவ சமூக வடிவம் ஆகியவற்றை இங்கு புகுத்தினர். 'பூர்ஷ்வா' தாராளவாதக் கருத்தாக்கங்கள் இங்கு அறிமுகப்படுத்தப்பட்டன. தங்களது ஆட்சியை நிலைநிறுத்துவதற்காக அவர்கள் கையாண்ட பல்வேறு உத்திகள், பார்ப்பனர்கள் மீண்டும் வலுப்பெறுவதற்கு வழிவகை செய்ததுடன், தாழ்த்தப்பட்டு - ஒடுக்கப்பட்டுக் கிடந்த மக்களும் சுய அடையாளங்கள் பெற உதவின. ●

**- தொடரும்**



படிப்பகம்

www.padippakam.com



# வரலாறு காணாத பேரணி

**"நீதி மன்றங்களில் ஒடுக்கப்பட்ட மக்களுக்கு உரிய பிரதிநிதித்துவம் வேண்டும்" - பாஸ்வான் அறைகூவல்**



பாட்னாவில் நடைபெற்ற தலித் சேனா பேரணியில் பங்கேற்ற இயக்கத்தினர்

பீகார் தலைநகர் பாட்னாவில், நவம்பர் 26 அன்று வரலாறு காணாத அளவில் தலித் பேரணி நடைபெற்றது. தலித் சேனாவின் தேசிய தலைவரும் மய்ய தொலைத் தொடர்பு அமைச்சருமான மாண்புமிகு ராம்விலாஸ் பாஸ்வான் அவர்கள், இப்பேரணிக்கு அறைகூவல் விடுத்திருந்தார்கள். நான்கு லட்சம் மக்கள், இந்தியாவின் பல்வேறு மாநிலங்களிலிருந்தும் கலந்து கொண்டனர். சிறப்புற நடைபெற்ற இம்மாநாட்டிற்கு திரு. பாஸ்வான் தலைமை வகித்தார்.

பீகாரில் தலித் மக்களுக்கு எதிராகத் தொடர்ந்து நடைபெற்று வரும் கொடுமைகளுக்கு முற்றுப் புள்ளி வைக்கும் வகையில் பேரணி நடைபெற்றது. இதுவே, மாநாட்டின் மய்ய குறிக்கோளாக இருப்பினும், பொதுவாக இந்தியா முழுவதும் உள்ள தலித் மக்களின் பிரச்சினைகள், அம்மக்களுக்கான உரிமைகள் மற்றும் எதிர்காலத்திட்டங்கள் குறித்தும் இங்கு விரிவாக பேசப்பட்டன.

தமிழ் நாடு தலித் சேனா சார்பாக, நூற்றுக்கும் மேற்பட்ட மக்கள் பாட்னா பேரணியில் கலந்து கொண்டனர். தமிழக தலித் சேனாவின் தலைவர் திரு. பெ. சந்திரசேகசன், பொருளாளர் திரு. என். ஆறுமுகம் மற்றும் மாவட்டத் தலைவர்களும் முக்கிய நிர்வாகிகளும் இதில் பங்கேற்றனர். மேலும், 'இந்துஸ்தான் டெலி பிரின்டர்ஸ் எஸ்.சி./எஸ்.டி. சங்க' நிர்வாகிகளும் பங்கேற்று சிறப்பித்தனர்.

இம்மாநாட்டில் சிறப்புரையாற்றிய மாண்புமிகு. ராம்விலாஸ் பாஸ்வான் அவர்கள், தனியார் துறைகளில் இட ஒதுக்கீடு அளிக்கப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தியும், தலித் சிறுபான்மை மக்களுக்கு இடஒதுக்கீடு அளிக்க வேண்டும் என்றும், நீதி மன்றங்களில் இடஒதுக்கீட்டின் அவசியத்தையும் வலியுறுத்திப் பேசினார். தேசிய ஜனநாயகக் கூட்டணியில், தான் அங்கம் வகித்தாலும் ஒடுக்கப்பட்ட, சிறுபான்மை இன மக்களுக்கு எந்த வகையில் இடையூறு வந்தாலும் அதை எதிர்த்துநிற்கும் முதல் நபராக இருப்பேன் என்று உறுதி கூறினார். ●



மாநாட்டுப் பேரணியில் தமிழக தலித் சேனா



படிப்பகம்

www.padippakam.com






பீகாரில் நடைபெற்ற பேரணியில் தமிழக தலித் சேனா தொண்டர்களின் அணிவகுப்பு

காஞ்சிபுரம் மாவட்டத்தில் பட்டு நெசவில் ஈடுபட்டுள்ள குழந்தைத் தொழிலாளர்கள், குழந்தைகள் நாள் விழா கொண்டாடினர். 15.11.99 அன்று வெங்கடேஸ்வர நகரில் நடைபெற்ற இந்நிகழ்ச்சிக்கு - சிறப்பு அழைப்பாளர்களாக 'தலித் சேனா' மாநிலத் தலைவர் திரு. பெ. சந்திரசேகரன், ஆர்.கே. சாமிநாதன், திரு. சு. நடராசன் ஆகியோர் கலந்து கொண்டு குழந்தைகள் நாள் உரை நிகழ்த்தினர்.

இங்கு குழந்தைத் தொழிலாளர்கள் நடத்திய கலைநிகழ்ச்சியும் நடைபெற்றது. அதில் குழந்தைகள் உழைப்பை எதிர்த்தும், கல்வியின் அவசியத்தை வலியுறுத்தியும், முதலாளிகளின் சுரண்டல்களை வெளிப்படுத்தியும் குழந்தைத் தொழிலாளர்கள் நடனம், பாடல்கள் மூலம் வெளிப்படுத்தினர்.

கலை நிகழ்ச்சியில் பங்குபெற்ற குழந்தைத் தொழிலாளர்களுக்கு திரு. பெ. சந்திரசேகரன் பரிசுகள் வழங்கினார். குழந்தைத் தொழிலிலிருந்து விடுபட்டு மீண்டும் பள்ளியில் சேர்ந்த இவர்கள், தங்களுடைய பணிகுறித்தும் மீண்டும் பள்ளியில் சேர்ந்த விதம் குறித்தும் - சுயவிமர்சன உரை நிகழ்த்தினர். 30 பெற்றோர்களும், 60 குழந்தைத் தொழிலாளர்களும் இந்நிகழ்ச்சியில் பங்கு பெற்றனர். குழந்தைகள் உழைப்பு எதிர்ப்புப் பிரச்சாரக் குழு அமைப்பாளர் டி. ராஜ் வரவேற்றுப் பேசினார். சகோ. மரியசவுந்திரம், பணிகள் குறித்து விளக்கிப் பேசினார். இந்நிகழ்ச்சிகளை, காஞ்சி மாவட்ட 'சமூக செயல்பாட்டு மய்யம்' சிறப்புற ஒருங்கிணைத்தது. •

## நன்றி

• 'தலித்சேனா'வின்தேசியத்தலைவர் அறைகூவல் விடுத்த மாநாட்டுக்கு தமிழகத்தின் அனைத்துப் பகுதிகளிலிருந்தும் வருகை புரிந்து சிறப்பித்த இயக்கத் தோழர்களுக்கும், நிர்வாகிகளுக்கும், நண்பர்களுக்கும் என் நெஞ்சார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

– பெ. சந்திரசேகரன்,
தலைவர் - 'தலித் சேனா'

## சிறைக் கலவரம்

சென்னை மத்திய சிறையில் 17.11.99 அன்று காவல் துறையினர் சிறைகைதிகள் மீது நடத்திய துப்பாக்கிச்சூடு மற்றும் காட்டுமிராண்டித் தனமான தாக்குதல்களால் 11 பேர் இறந்தனர். நூற்றுக்கும் மேற்பட்டோர் படுகாயம் அடைந்தனர். அரசாங்கத்தின் அப்பட்டமான இம்மனித உரிமை மீறலை 'தேசிய மனித உரிமை ஆணையமும்', 'மாநில மனித உரிமை ஆணையமும்' கண்டுக் கொள்ளவேயில்லை. இந்நிலையில், 'பி.யு.சி.எல்' என்ற மனித உரிமை அமைப்பு இது தொடர்பான முழு விவரங்களை கண்டறிந்து விரிவான அறிக்கை வெளியிட்டுள்ளது. மறைக்கப்பட்ட இந்த உண்மைத் தகவல்களைப் பெற விரும்புவோர் 'தலித் முரசு' அலுவலகத்தைத் தொடர்பு கொள்ளவும். ■

## 'தலித் முரசு' நான்காம் ஆண்டு சிறப்பிதழ்

அன்பார்ந்த வாசகர்களே,

'தலித் முரசு' பிப்ரவரி - 2000 இல் 4 ஆம் ஆண்டில் அடியெடுத்து வைக்கவுள்ளது. அதனைச் சிறப்பிக்கும் வகையில், ஒரு சிறப்பிதழை அதிக பக்கங்களுடன் வெளியிட இருக்கிறோம். வழமைபோல் இதற்குத் தங்களின் ஒத்துழைப்பு அவசியம்.

ஒடுக்கப்பட்ட - பிற்படுத்தப்பட்ட - சிறுபான்மை இன மக்களின் விடுதலைக்கான சில அடிப்படை செயல் முறைத் திட்டங்கள் தேவைப்படுகின்றன. நாம், ஒவ்வொரு முறையும் ஆதிக்க சாதியினரின், 'இந்துத்துவா' சக்திகளின், பார்ப்பனீய திசைதிருப்பும் சூழ்ச்சிகளுக்கு ஏற்ப - அதற்கு பதிலடி கொடுக்கும் வகையிலேயே காலத்தை செலவழித்துக் கொண்டிருக்கிறோம்.

ஆனால், ஒடுக்கப்பட்ட மக்களின் விடுதலைக்கென சில உறுதியான நீண்டகால செயல்திட்டங்கள் வகுக்கப்பட வேண்டும். அந்த வகையில் நாம் போராடக் களம் அமைக்க வேண்டும். இப்போராட்டத்தைப் பலப்படுத்தும் வகையில் - அதற்கு ஓர் கருத்தியல் தளம் வேண்டும். அப்பொழுதுதான் ஓரளவுக்கு நம் எதிர்காலத் தலைமுறையினர் இழிவு நீங்கி, உரிமையுடன் - சமூக நீதியுடன் வாழ வழி ஏற்படும்.

இதில், பத்திரிகை துணையுடன் கருத்தியல் தளத்தில் இயங்கிட, வழிகாட்டிடும் வகையில் 'தலித் முரசு' சிறப்பிதழ் அமைதல் வேண்டும். நாம் முன்வைக்கும் சில மய்யப் பிரச்சினைகள் / செயல் திட்டங்கள். 1. மண்ணுரிமை 2. தலித் பெண்ணியம் 3. மதமாற்றம் 4. இரட்டை வாக்குரிமை 5. சாதி ஒழிப்பு 6. தாழ்த்தப்பட்டோர் - பிற்படுத்தப்பட்டோர் ஒற்றுமை 7. சமூக, அரசியல், தளங்களில் தலித் தலைமை 8. இடஒதுக்கீடு 9. உலகமயமாக்கல் 10. தலித் இயக்கங்கள் 11. தலித் வரலாறு.

இது தொடர்பான கட்டுரைகள், கடிதங்கள், ஆலோசனைகள் வந்து சேர வேண்டிய கடைசி நாள் : டிசம்பர். 30

– ஆசிரியர்



படிப்பகம்

www.padippakam.com



# தூக்குத் தண்டனையை நியாயப்படுத்துவதா?

**'உணர்வு' - இஸ்லாமிய வார இதழுக்கு ஒரு மறுப்பு**

**விடுதலை க. ராசேந்திரன்**

தூக்குத் தண்டனை வேண்டுமா? வேண்டாமா? என்ற வாதம், இப்போது நாடுமுழுவதும் அனல் கிளப்பியுள்ளது. ராஜிவ் வழக்கில் குற்றம் சாட்டப்பட்டுள்ள நால்வரின் தூக்குத் தண்டனை நிறுத்தப்பட்டுள்ளதே - வாதம் சூடுபிடித்துள்ளதற்கான அடிப்படை. இதில் பார்ப்பன ஏடுகளும், பார்ப்பன சக்திகளும், ராஜிவ் வழக்கில் குற்றம் சுமத்தப்பட்டவர்கள் தூக்கிலிடப்பட்டே ஆகவேண்டும் என்று துடிக்கின்றன. 'இந்து' நாளேடு தூக்குத் தண்டனை தேவை இல்லை என்று தலையங்கத்தில் கருத்துத் தெரிவித்தாலும் கூட, ராஜிவ் வழக்கில் குற்றம் சாட்டப்பட்டுள்ள நால்வருக்குத் தூக்குத் தண்டனை தரப்பட வேண்டும் என்ற உணர்வுகளையே - செய்திகளாக வெளியிட்டு வருகிறது.

எடுத்துக்காட்டாக, சோனியா காந்தி, குற்றம் சாட்டப்பட்டுள்ள நான்கு பேருக்கும் தூக்குத் தண்டனை தருவதை, தானோ தனது குடும்பமோ விரும்பவில்லை என்று வெளிப்படையாகக் கூறியிருந்தும்கூட, நளினிக்கு மட்டுமே கருணை காட்ட வேண்டும் என்று அவர் கூறியிருப்பதாக, உண்மைகளைத் திரித்து செய்தியை வெளியிட்டு மகிழ்ந்திருக்கிறது 'இந்து' ஏடு.

ஜெயலலிதா, தூக்குத் தண்டனையை ஆதரிக்கிறார். முதல்வர் கருணாநிதியோ குழம்பிக் கொண்டிருக்கிறார். மத்தியில் ஆட்சியைப் பிடித்திருக்கும் தேசிய ஜனநாயக முன்னணியிலும் கருத்து வேறுபாடுகள் எழுந்துள்ளன. டாக்டர் ராமதாஸ், மத்திய அமைச்சர் ஜார்ஜ் பெர்னாண்டஸ், ராம்ஜெத்மலானி போன்றோர் தூக்குத் தண்டனைக்கு எதிராகவும், பா.ஜ.க. தலைவர்கள் ஜனா கிருஷ்ணமூர்த்தி, வெங்கையா (நாயுடு) போன்றவர்கள் தூக்குத் தண்டனைக்கு ஆதரவாகவும் கருத்துத் தெரிவித்து வருகின்றனர்.



வாழப்பாடியும், சுப்ரமணிய சாமியும் தூக்குத் தண்டனையைத் தந்தே ஆகவேண்டும் என்று வரிந்து கட்டிக் கொண்டு நிற்கிறார்கள். ஆனால், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியும், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியும் மட்டும் இன்னமும் கடுமையான மவுன வாதத்தைப் பின்பற்றிக் கொண்டிருக்கின்றன.

இந்நிலையில், 'தமிழ் நாடு முஸ்லிம் முன்னேற்றக் கழக'த்தின் 'உணர்வு' வார ஏடு, தூக்குத் தண்டனைக்கு ஆதரவாக தீவிரமாக எழுதத் துவங்கியிருக்கிறது. சிறுபான்மை சமூகத்தினரின் உரிமைகளுக்காக, நாம் குரல் கொடுப்பவர்கள் என்ற உரிமையோடு, 'உணர்வு' வெளிப்படுத்தும் இந்தத் தவறான உணர்வைச் சுட்டிக் காட்ட வேண்டியது மிகவும் அவசியமாகிறது. 'வேண்டும் தூக்குத் தண்டனை' என்ற தலைப்பில் 'உணர்வு' தலையங்கம் எழுதியுள்ளதோடு (5.11.99), அடுத்து வந்த இதழில் தூக்குத் தண்டனைக்கு எதிராக - 'நக்கீரன்' வெளியிட்ட கட்டுரையையும் கடுமையாக விமர்சித்திருக்கிறது.

ராஜிவ் வழக்கு 'தடா' சட்டத்தின் கீழ் நடத்தப்பட்டதாகும். 'தடா' சட்டத்தின் கீழ் நடத்தப்படும் வழக்குகளில், காவல் துறை அதிகாரிகளிடம் தரும் ஒப்புதல் வாக்குமூலத்தை, நீதிமன்றம் அப்படியே ஏற்றுக் கொள்ள வேண்டும். அப்படிப்பட்ட ஒப்புதல் வாக்குமூலம் ஒன்றுதான் - இப்போது இவர்கள் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றங்களுக்கான ஒரே சாட்சி. 'தடா' சட்டம் கொடூரமானது; அதை ஒழிக்க வேண்டும் என்று வலியுறுத்தி வந்த 'உணர்வு' இந்த சட்டத்தைப் பயன்படுத்தி - வழங்கப்பட்ட தூக்குத் தண்டனையை மட்டும் நியாயப்படுத்துவது எந்த வகையில் நியாயம்? (கடந்த இதழில் கூட, தலையங்கத்தில் 'தடா' வை கடுமையாக விமர்சனம் செய்திருக்கிறது).

இந்தியாவில் நீதித்துறையும், நிர்வாகம் மற்றும் காவல் துறையும் விருப்பு வெறுப்பின்றி உண்மையானக் குற்றவாளிகளைத் தண்டித்து - தூக்கு தண்டனை அளிப்பதுபோல 'உணர்வு' எழுதுவது வியப்பாக இருக்கிறது. நெல்லை - தாமிரபரணி நதியில் 17 பேருக்கு 'மரணத்தை' ஏற்படுத்திய காவல்துறையினருக்குத் தூக்குத் தண்டனை தருவதற்கு இந்த நாட்டில் சட்ட வாய்ப்புகள் ஏதும் உண்டா?

கோவை குண்டு வெடிப்பில் கைது செய்யப்பட்டு, அடிப்படை மனித உரிமைகளுக்கு எதிராக சிறைச்சாலைக்குள்ளே மூர்க்கத்தனமாகத் தாக்கி, கைதிகளுக்கான சட்டரீதியான உரிமைகளையும் வழங்க மறுத்து வருவதும், குற்றம் சாட்டப்பட்டுள்ள சிலரையாவது தூக்குத் தண்டனைக்கு உள்ளாக்க வேண்டும் என்ற உள்நோக்கத்தோடு காவல் துறை, வேகமாக செயல்பட்டு வருவதும் 'உணர்வு' அறியாத ஒன்று அல்ல!

அப்படி ஒரு நிலை வரக்கூடாது என்றே விரும்புகிறோம். அப்படி ஒரு நிலை வந்து விட்டால், தூக்குத் தண்டனையை நியாயப்படுத்திவிட முடியுமா? என்ற கேள்வியை வேதனையோடு எழுப்ப வேண்டியிருக்கிறது. **அப்படி ஒரு நிலைமை வரும்போது, நாங்கள் தூக்குத் தண்டனை தரக்கூடாது என்ற முழக்கத்தைத்தான் உறுதியாக முன் வைப்போம்.** பா.ஜ.க.வின் வெங்கையா நாயுடும், இல.கணேசனும் கூறும் அதே கருத்துக்களை 'உணர்வும்' எதிரொலிப்பதுதான் வியப்பாக இருக்கிறது.

இது தவிர, சில வாதங்களையும் 'உணர்வு' முன் வைத்திருக்கிறது. ''கொலைக் குற்றம் புரிவோரின் எண்



படிப்பகம்

www.padippakam.com

ணிக்கை குறைய - இதுபோன்ற கடுமையான சட்டம் தேவை என்று நிரூபிக்கப்பட்டுள்ளது'' என்று எழுதியிருக்கிறது. இது முற்றிலும் உண்மைக்கு மாறானது. இது, எங்கே நிரூபிக்கப்பட்டுள்ளது என்ற விவாதத்தை வெளியிட்டிருக்கலாமே!

தூக்குத்தண்டனை நடைமுறையில் இருப்பதால், கொலைக் குற்றங்கள் குறைந்து விட்டதா என்று அறிய அய்.நா.வின் மனித உரிமை ஆணையம் 1998-இல் உலக அளவில் ஓர் ஆய்வு நடத்தியது. அதில் தூக்குத் தண்டனைக்கும் குற்றங்களின் எண்ணிக்கைக்கும் எந்தத் தொடர்பும் இல்லை என்று அந்த ஆய்வு கண்டறிந்துள்ளது.

இந்தியாவின் சட்டக் குழுமம் (Law commission) தனது 35ஆவது அறிக்கையில், ''தூக்குத் தண்டனை நடைமுறையில் இருப்பதாலேயே கொலைக் குற்றங்கள் குறைந்து விடாது. இதுபற்றி விரிவாக ஆய்வு செய்த பிறகே இந்த முடிவுக்கு வந்திருக்கிறோம்'' என்று குறிப்பிட்டிருக்கிறது. காந்தியைக் கொலை செய்தவருக்குத் தூக்குத் தண்டனை தரப்பட்டதால், இந்திராவின் கொலையைத் தடுக்க முடியவில்லை; அதேபோல் இந்திராவின் கொலையாளிக்கு தூக்குத் தண்டனை தந்ததால், ராஜிவ் கொலையையும் தடுக்க முடியவில்லை என்பதுதான் எதார்த்தம்.

'உணர்வு' - இந்த நாட்டின் சமூக அரசியல் சூழலைக்கவனத்தில் கொண்டு இந்தப் பிரச்சனையைப் பார்க்காமல், 'இஸ்லாத்தை' மேற்கோள்காட்டி , தூக்குத் தண்டனையை நியாயப்படுத்த முன்வந்திருப்பது வியப்பைத்தருகிறது! அவர்கள் மொழியிலேயே ஒரு விளக்கத்தை முன் வைப்போம்.

பாகிஸ்தான் தண்டனைச் சட்டத்தின் 302ஆவது பிரிவு, மரணதண்டனைக்கு வழி செய்கிறது. ஆனாலும் இந்த மரண தண்டனை இஸ்லாத்தின் நெறிமுறைகளுக்கு புறம்பானது என்று பாகிஸ்தான் தலைமை நீதிபதி அப்துல் அக்கீம், அந்நாட்டு நீதிமன்றத்தின் சார்பில் தீர்ப்பளித்துள்ளார். குரானிலிருந்து பல்வேறு கருத்துகளை மேற்கொள்காட்டி, தனது கருத்தை நிறுவிய நீதிபதி 'இஸ்லாம் தனக்கு முன்னிருந்த பழிதீர்க்கும் வழக்கத்தின் கொடும் பயங்கரங்களைப் பெரிதும் தணித்து விட்டது. கருணைக்கும் மன்னிப்புக்கும், அது அழுத்தம் திருத்தமாய் பரிந்துரை செய்கிறது. மன்னிப்பு என்பது, மன்னித்தவரின் பாவங்களையும், கொலையுண்டவரின் பாவங்களையும் போக்கிவருகிறது'' (ஆதாரம் : பாகிஸ்தான் பெஷாவர் உயர்நீதி மன்றத்தில் விசாரணைக்கு வந்த குல்காசன்கான் வழக்கு)

உலகம் முழுவதும் தூக்குத் தண்டனைக்கு உள்ளாகிறவர்கள் எல்லாம் - சமூகத்தின் அடித்தளத்து மக்கள்தான் என்பதையும் 'ஒடுக்கப்பட்டோர் உரிமைக்குரல்' என்ற முழக்கத்தோடு வெளிவந்து கொண்டிருக்கும் 'உணர்வு'க்கு சுட்டிக் காட்ட விரும்புகிறோம்.

இறுதியாக, ''ஒருவன் கொல்லப்பட்டால் அவனது மனைவி, மகன், தாய், தந்தைதான் கொலையாளிக்கு என்ன தண்டனை வழங்க வேண்டும் என்பதைத் தீர்மானிக்க வேண்டும்'' என்று 'உணர்வு' இதழ் எழுதியிருக்கிறது. இப்போது சோனியாவும், அவரது பிள்ளைகளுமே, தூக்குத் தண்டனை தர வேண்டாம் என்று கூறிவிட்டார்கள். எனவே, 'தூக்குத் தண்டனை தர வேண்டாம்' என்று 'உணர்வு' ஏடு வலியுறுத்தும் என்று எதிர்பார்க்கலாமா?

With Best Compliments From

MAS TIMBER CORPORATION

TIMBER & PLYWOOD MERCHANT

19, First Cross Street, Trustpuram

Kodambakkam, Chennai - 600 024

Ph : 484 33 29



படிப்பகம்

www.padippakam.com



# தலித் வரலாறு எழுதப்பட வேண்டும்

✉ 'தமிழக அரசியலில் தலித் எழுச்சி' - இந்திய, தமிழக பத்திரிகைகள் உணர்த்தாத ஒரு வாக்கு மதிப்பீட்டு ஆய்வாகும். 'இந்துன்னு சொன்னா ஒத்துக்கணும்' - தீபாவளி வெளியீடு முடிந்தவுடன், கருணாநிதி வீட்டுக்குச் செல்ல வேண்டும். 'ஒரு நதியின் மரணம்' - தி.மு.க. அரசின் ஆயுள் காலம் முடியப் போவதை உணர்த்தியது. 'பயன்படாத தாட்கோ திட்டம்' குறித்து தக்க நேரத்தில் எடுத்துரைத்த தலித் முரசுக்குப் பாராட்டுக்கள்.

– **ஆர். செல்வகுமார்,** திருமாந்துறை

✉ நக்கீரன், ஜூனியர் விகடன் இதழ்களைக் காசு கொடுத்து வாங்கும் நம் தோழர்கள், தலித் முரசு வாங்க முன்வராதது மிகவும் வருத்தமாக இருக்கிறது. தலித் முரசு தொடர்ந்து வெளிவர வேண்டும். தஞ்சை, திருவாரூர், நாகை மாவட்டங்களில் அதிகளவில் சந்தா சேர்க்கும் பணியில் ஈடுபட்டுள்ளேன்.

– **பி. சிவக்குமார்,** பனங்காட்டாங்குடி

✉ தலித் விடுதலை, அதனைச் சார்ந்துள்ள பிற்படுத்தப்பட்டோர் விடுதலை, தமிழ்த்தேச விடுதலை, பெண் விடுதலை என அனைத்து முற்போக்குக் குணங்கள் கொண்ட இதழாக தலித் முரசு உள்ளது. ஒடுக்கப்பட்ட மக்களுக்காக இதுவரை வெளிவந்த இதழ்களிலேயே சரியான இதழ் தலித் முரசுதான் என்பது என் கணிப்பு. 'அம்பேத்கர், பெரியார் பேசுகிறார்' பகுதி மிகவும் அவசியம்.

– **சொ. சு. தமிழினியன்,**
காயல்பட்டிணம்

✉ போராளிகளுக்குத்தான் போராட்டமும் சோதனைகளும் வரும் என்பது வரலாற்று உண்மை. எனவே, துவளாமல் தலித் முரசு பீடுநடை போடட்டும்.

– **எஸ். சாம்பசிவம்,** ஆவடி

✉ தலித் முரசு நவம்பர் இதழில், 'இந்திய மாணவர் இஸ்லாமிய இயக்கத்' தோழர்கள் கைதானதைக் கண்டிக்கும் செய்தி பதிவாகியிருப்பதை மிகவும் முக்கியமானதாகக் கருதுகிறேன். காஷ்மீரில் இந்திய ராணுவம் அத்துமீறியதை, பிரபல ஆங்கில நாளிதழ்கள் மற்றும் சர்வதேச மனித உரிமை அமைப்புகளின் அறிக்கைகளை மேற்கோள்காட்டி எழுதியதற்

காக மூன்று மாதங்களாக - நான்கு முஸ்லிம் இளைஞர்கள் சிறைவைக்கப்பட்ட செய்தியை, எவரும் பெரிதுபடுத்தாத தமிழ்ச் சூழலில், நீங்கள் அதனை கணக்கில் கொண்டு வெளியிட்டிருப்பது வரவேற்கத்தக்கது. ஒடுக்கப்பட்ட சிறுபான்மை இன மக்களின் ஒற்றுமையைக் கருத்தில் கொண்டு, இது போன்ற மீறல்களைத் தொடர்ந்து பதிவு செய்து வெளியிடுவது மிக மிக அவசியம்.

– **அ. பீர்முகம்மது,** பெரியமேடு

✉ தலித் மக்களுக்கு எழுச்சியையும் அறிவுத் தெளிவையும் ஏற்படுத்த, தலித் முரசு தொடர்ந்து வெளிவர வேண்டும். மேலும், தலித் மக்களின் செழுமையான வரலாறு பற்றி எழுத ஒரு பக்கம் ஒதுக்கினால் நல்லது. அதன் மூலம் தலித் மக்களின் தாழ்வு மனப்பான்மையை அகற்றி வீறு கொள்ளச் செய்ய முடியும் என நம்புகிறேன்.

– **எஸ். பரமசிவம்,** ஆத்தூர்

## கட்டப் பஞ்சாயத்து முதல் உச்ச நீதி மன்றம் வரை ...

இந்தியாவில், மக்களாட்சியின் முக்கிய தூண்களாகக் கருதப்படுகின்ற நாடாளுமன்றம், நிர்வாகம், நீதிமன்றம், பத்திரிகை ஆகிய நான்கும் - நடைமுறையில் சாதி அமைப்பை உயர்த்திப் பிடிக்கும் தூண்களாகவே இருக்கின்றன. கடந்த இரண்டு ஆண்டுகளாக, குண்டர் தடுப்புச் சட்டத்தின் கீழ் கைதாகும் தலித் இளைஞர்களின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டே செல்கிறது. இது தொடர்பாக, நீதி மன்றம் அரசிடம் உரிய விளக்கம் கேட்க வேண்டும். ஆனால், நீதி மன்றம் அவ்வாறு செய்வதில்லை. அதனால்தான், தங்களின் நியாயமான அடிப்படை உரிமைகளுக்காகப் போராடும் தலித் இளைஞர்கள் பலர் (18 வயதிற்குக் கீழ் உள்ளவர்கள் கூட) குண்டர் தடுப்புச் சட்டத்தில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அடிப்படை மனித உரிமைகளுக்கு முற்றிலும் எதிராக நடந்து கொள்ளும் அரசு, நீதி மன்றம் பற்றி - ஜனநாயகத்தின் பிற தூண்களும் அமைதி காக்கின்றன. கிராம நீதி மன்றம் என்று சொல்லப்படுகின்ற கட்டப்பஞ்சாயத்து முதல் உச்சநீதிமன்றத் தீர்ப்புவரை - ஒடுக்கப்பட்ட மக்களுக்கு எதிராகவே அமைகின்றது என்பதில் துளியும் சந்தேகமில்லை. கீழ் வெண்மணி முதல் இன்றைக்கு அருப்புக் கோட்டை - அய்யன்ரெட்டிப்பட்டி, மதுரை - உலகுபிச்சம்பட்டி, விழுப்புரம் - வழுதாவூர் என அனைத்திலும் தலித் மக்கள் தாக்கப்பட்டு - அவர்களுக்கே ஆயுள் தண்டனையும் வழங்கப்படுகிறது. நீதி மன்றங்களிலும் சாதிக்கு ஒரு நீதிதானா?

– பாவெல் முத்து, மதுரை

✉ நவம்பர் மாத தலித் முரசு மிகச் சிறப்பாக அமைந்திருந்தது. ஒடுக்கப்பட்ட மக்கள் அனைவருக்குமான செய்திகள் நிறைந்திருப்பது கண்டு மகிழ்ந்தேன். தலித் மக்களின் அநீதிகளைத் தட்டிக் கேட்கும் ஒரே இதழ் தலித் முரசுதான். இதழ் தொடர்ந்து வர வேண்டும்.

– **மா. தமிழ்ச் செல்வன்,** சென்னை - 31

✉ தலித் முரசில் அம்பேத்கர் - பெரியாரின் கருத்துக்கள் இதழுக்கு அழகும் பெருமையும் சேர்க்கிறது. சங்கமித்திரையின் தொடர், பகுத்தறிவுக் கருத்துக்களை சிறப்பாகப் பதிவு செய்கிறது. நவம்பர் இதழில் 'இந்தியாவில் இனவெறி இப்படித்தான்' என்ற தலைப்பில் சாந்தி என்ற தலித் பெண்ணின் கை வெட்டப்பட்டுள்ள கொடுமை பற்றி அறிந்து வேதனையுற்றேன். சாந்தி குடும்பத்திற்கு 2 லட்சம் இழப்பீடு தர வேண்டும்; இக்கொடுமை பற்றி உரத்த குரல் எழுப்பி குற்றவாளிகளை, வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்ய வேண்டும்.

– **டி. அம்பேத்கர்தாஸ்,** தாராவி

✉ தலித் முரசு தொய்வில்லாது தொடர்ந்து வெளிவரவேண்டுமென்பது எங்களின் விருப்பம். மைய அமைச்சர் ராம்விலாஸ் பாஸ்வான், லண்டனில் நடைபெற்ற கூட்டத்தில், உயர்பதவிக்கான இடஒதுக்கீட்டை உச்ச நீதிமன்றம் ரத்து செய்திருப்பது குறித்து ஆழ்ந்த வருத்தத்தினையும் அதற்கு மாற்றாக, தொடர்ந்து இட ஒதுக்கீடு கிடைக்க சட்டத்திருத்தத்தையும் கொண்டுவரப் போவதாகக் கூறியிருப்பது நம்பிக்கை அளிக்கிறது.

– **டாக்டர். எஸ். ஜெயராமன்,**
புதுக்கோட்டை

✉ சமூக நீதிக் கருத்துப்பரப்பலுக்கான தலித் முரசு இதழை, நடத்த முடியவில்லை என்னும்போது - நம் இனத்துக்கே இன்னும் உணர்வு வரவில்லையோ என்றுதான் எண்ணத் தோன்றுகிறது. 'தலித் முரசு உயிர்ப்பு நிதிக் குழு' ஒன்று அமைக்க வேண்டும். நிரந்தர வைப்பு நிதி ஒன்றும் தேவை.

– **அழகிய பெரியவன்,**
பேரணாம்பட்டு



படிப்பகம்

www.padippakam.com



# மானுடப் போராளி...

எந்தக் கடவுளும் வரவில்லை இதுவரை
எரியும் தீண்டத்தகாதவரின் பரிதாப
நிலைகண்டு பதற.
அநேகக் கடவுளர்கள் அணிவகுத்தனர்
அந்தப் பெரிய மனிதர்களுக்காக.

நம்பிக்கை, மரியாதை
எவையுமற்று அவர்கள்
நாடோடிகளாயினர்.
பன்னிரெண்டு ஆண்டுகளுக்குப்பின்
குப்பைகள் கவனிக்கப்படுவதைப் போல
ஒரு மனித விடியலாய் புலர்ந்தார் அவர் -



14.4.1891

6.12.1956

காலத்தின் கைகளாய் சிந்தனைத்
தேரோட்டி வந்தார்.

பூமி அதிர்ந்தது; புயல் வேகம் கற்றது.
கொந்தளித்துக் குலுங்கும் அரசியல் களத்தில்
மானுடப் போராளி; ஒரு புரட்சியாளர்
அம்பேத்கர் வருகை புரிந்தார்.

ஓர் ஒப்பந்தம் பற்றியப் பேச்சு
காந்திக்கும் ஜின்னாவுக்கும் இடையில்
அலையடித்தது அந்நாட்களில்.

பிரிட்டிஷ்காரர்கள் இந்தியாவை விட்டுப்
போய் விடுவார்கள்
சர்ச்சில் முதல் ஜார்வரை
இது முணு முணுக்கப்பட்டது.

தனியாய்ப் போகும் பாகிஸ்தான்
அல்லது பிளவுறாத இந்தியா
இரண்டு நிலைகள்.
இரண்டுமே உண்மையை எண்ணவில்லை.

இருவரும் பணக்காரத் தலைவர்கள்
அவர்கள் ஓடிவந்து விழுந்த ஒரு கல்லின்
இரு துண்டுகள்.
தந்திரம் தந்திரத்தோடு சேர்ந்து தந்திரம் செய்தது.

இரண்டு நாடுகளின் ஏகபோக மன்னரென
தாங்களே பட்டம் சூட்டிக் கொண்ட அவர்களின்
விழிகளில் ஏழைகள் வெற்றிடமாக்கப்பட்டனர்.

பிரதேசப் பெருவெளிகளைப் பிடித்துக் கொண்டு
மக்களை வலை வீசிப் பிடித்தார்கள்
தங்கள் தங்களுக்கென.

கடைசியில் காந்தி சொன்னார் ஜின்னாவிடம்
"உங்கள் எல்லையை எங்கு வேண்டுமானாலும்
வரைந்து கொள்ளுங்கள்,
உங்கள் விருப்பம் போல; ஆனால்,
'அரிஜன்'களை இங்கேயே விட்டுவிடுங்கள்
மற்ற மக்களில் எவ்வளவு பேரையும்
வளைத்துக் கொள்ளுங்கள் விருப்பம்போல
அவர்களனைவரையும்
இசுலாமுக்கும் சேர்த்துக் கொள்ளுங்கள்"

குவாய்தே ஆசாம் சொன்னார்:
"காந்தி அய்யா, எங்களிடமிருந்து இன்னும்
அதிகமாக எடுத்துக் கொள்ளுங்கள், ஆனால்
பொது அடிமைகள் தீண்டத்தகாதவர்கள். எனவே
நீங்கள் பாதி; நாங்கள் பாதி பிரியுங்கள்."

முடிவடையாத பேச்சுவார்த்தையின்போது
சவுக்கின் வீறலாய் ஒரு குரல் கேட்டது:

"என் தேசம் மாறலாம் ஆனால்
இன்னொரு கருணையை நம்பி
இனி எப்படியும் வாழ முடியாது"

இது லண்டனில் ஒலித்த அம்பேத்கரின்
அக்கினிக் குரல்.

அவர்கள் கேட்டார்கள்
பாரபட்சமான பிரிவினையை எதிர்க்கும் யார் இவர்?
அவர்தான் கூரிய உளிமதிக் கொண்டு
சட்டச் சிற்பம் செதுக்கிய சரித்திரம்.

அவர் கடல் நீர்மேல் நெருப்பெழுதி
புதிய பாதைகள் சமைத்தவர்.

தடைகள் பலவற்றைத் தகர்த்து
உடைத்தெறிந்து வீடற்று அலைந்த
அனாதைகள் அவரால் மனிதர்க்கு நிகராக்கப்பட்டனர்.

ஆலம் சொல்கிறான்:
'அவர் ஒரு விளக்கை ஏற்றினார்
அணைந்து போயிருந்த தீண்டத்தகாதவரின்
இதயங்களில்'.


- பஞ்சாப் கவிஞர்,
குர்தால் ராம் ஆலம்.
தமிழில் : அருணன், பிரபு
நன்றி : 'இந்தியன் லிட்டரேச்சர்'
இதழ்-185



படிப்பகம்

www.padippakam.com





# கடவுளை மறுக்கத் துணிய வேண்டும் ஏன்?

என்னை நாத்திகன் என்று சொல்கின்றவர்கள், நாத்திகன் என்பதற்கு என்ன அர்த்தம் கொண்டு சொல்கிறார்களோ, அந்த அர்த்தத்தில் நான் நாத்திகன்தான் என்பதை வலியுறுத்திச் சொல்கின்றேன். நாத்திகத்திற்குப் பயந்தவனால் ஒரு காரியமும் செய்ய முடியாது. அதிலும், சமதர்மக் கொள்கையைப் பரப்ப வேண்டுமானால், நாத்திகத்தினால்தான் முடியும். நாத்திகத்திற்கு 'சமதர்மம்' என்று பெயர். அதனால்தான் ரஷ்யாவையும் நாத்திக ஆட்சி என்கிறார்கள். புத்தரையும் நாத்திகர் என்றதற்குக் காரணம் - அவர் சமதர்மக் கொள்கையை பரப்ப முயற்சித்ததால்தான்.

நாத்திகம் என்பது சமதர்மக் கொள்கை மட்டுமல்ல; சீர்திருத்தம் அதாவது ஏதாவது பழைய கொள்கைகளை மாற்ற வேண்டுமானால் அந்த மாற்றத்தையும், ஏன், எவ்வித சீர்திருத்தத்தையுமே நாத்திகம் என்றுதான் யதாப்பிரியர்கள் சொல்லித் திரிவார்கள். எங்கெங்கு அறிவுக்கு மரியாதை இல்லையோ, சமத்துவத்திற்கு இடமில்லையோ அங்கெல்லாம் இருந்துதான் நாத்திகம் முளைக்கின்றன. கிறித்துவையும், முகமது நபியையும்கூட, நாத்திகர்கள் என்று யூதர்கள் சொன்னதற்கும் அவர்களது சமதர்மமும், சீர்திருத்தமும்தான் காரணமாகும்.

ஆகவே, நாம் இப்போது எதை எதை மாற்றவேண்டுமென்கிறோமோ அவைகள் எல்லாம் கடவுள் செய்ததாகவும் அல்லது கடவுள் தனது அவதாரங்களையோ, தனது தூதர்களையோ செய்யச் சொன்னதாகவுமே சொல்லப்படுவதால், அவைகளைத் திருத்தவோ, அழிக்கவோ புறப்படுவது - கடவுள் கட்டளையை மீறின அல்லது கடவுள் கட்டளையை மறுத்ததேயாகும்.

எடுத்துக்காட்டாக, மக்களில் நான்கு சாதி கடவுளால் உற்பத்தி செய்யப்பட்டது என்று சொல்லப்படுகையில், மேற்படி சாதி ஒழியவேண்டுமென்றால், அவன் கண்டிப்பாக கடவுளை மறுத்தோ அலட்சியம் செய்தோதான் ஆகவேண்டும். எல்லா மதங்களும், மதக் கொள்கைகளும் கடவுளாலோ, அவதாரங்களாலோ, கடவுள் தன்மையாலோ ஏற்பட்டது என்று சொல்லப்படுகையில், அம்மத வித்தியாசங்கள் ஒழிய வேண்டும் என்றும், மதக் கொள்கைகள் மாற்றப்பட வேண்டும் என்றும் சொல்லும் போது, அப்படிச் சொல்லுபவன் - அந்தந்தக் கடவுள்களை, கடவுள்களால் அனுப்பப்பட்ட தெய்வீகத்தன்மை பொருந்தினவர்களை அலட்சியம் செய்தவனேயாகின்றான். அதனால்தான், கிறித்தவர் அல்லாதவர் 'அஞ்ஞானி' என்றும், மகமதியரல்லாதார் 'காபீர்' என்றும், இந்து அல்லாதார் 'மிலேச்சர்' என்றும் சொல்லப்படுகின்றனர்.

மேடும் பள்ளமும் கடவுள் செயலானால், மேட்டை வெட்டிப் பள்ளத்தில் போட்டு சமன் செய்வது கடவுள் செயலுக்கு விரோதமான காரியமேயாகும். மனிதனுக்கு முகத்தில், தலையில் மயிர் முளைப்பது கடவுள் செயலானால், சவரம் செய்து கொள்வது கடவுள் செயலுக்கு எதிராகவே செய்யும், அதாவது ஓரளவுக்கு நாத்திகமான காரியமேயாகும். அதிலும், சவரம் செய்யச் செய்ய மறுபடியும் மறுபடியும் மயிர் முளைப்பதைப் பார்த்ததும் மேலும் சவரம் செய்வது வடிகட்டின நாத்திகமேயாகும்.

ஏனெனில், கடவுள் பார்த்து ஒருவனை அவனது "கர்மத்திற்காக" பட்டினி போட்டிருக்கும்போது, நாம் அவனுக்குச் சோறு போடுவது கடவுள் விரோதமான காரியமேயாகும். அதாவது, கடவுளை நம்பாத - கடவுளின் செயலை லட்சியம் செய்யாத தன்மையேயாகும். இப்படியே பார்த்துக் கொண்டு போனால், உலகத்தில் ஆத்திகன் ஒருவனும் இருக்க முடியாது. ஆதலால், நம்மைப் பொறுத்தவரை நாம் பல மாறுதல்கள் ஏற்பட விரும்புவதால் அவை கடைசியாய் நாத்திகமேயாகும். நாத்திகமும் சாஸ்திர விரோதமும், தர்மத்திற்கு விரோதமும் செய்யாமல் யாரும் ஒரு சிறிதும் உண்மையான சீர்திருத்தம் செய்யவே முடியாது.

நமது நாட்டினர்களே, ஏழைகளை வஞ்சித்துக் கொள்ளை அடிக்கிறார்கள்; பாமர மக்கள் கடவுள் செயல் என்று கருதிக் கொள்வதால் தினமும் ஏய்த்துக்கொண்டு வருகின்றார்கள். அப்படிப்பட்ட பாமர மக்களை விழிக்கச் செய்து, நீங்கள் ஏழைகளாய், தரித்திரர்களாய் இருப்பதற்கு கடவுள் செயல் காரணமல்ல; உங்கள் முட்டாள்தனம்தான் காரணம். ஆதலால், நீங்கள் கடவுள் செயலை லட்சியம் செய்யாதீர்கள் என்று சொன்னால்தான் - செல்வந்தர்களின் அக்கிரமங்களைப் பாமர மக்கள் அறியக்கூடும்.

அதுபோலவே, இன்று கோயில் கட்டுவது தர்மமாக இருக்கின்றது. ஆனால், பிற்காலத்தில் கோயிலை இடித்து விக்கிரங்களை உடைத்து, பள்ளிக் கூடங்களும், தொழிற்சாலைகளும் ஏற்படுத்துவது தர்மம் என்றானாலும் ஆகலாம். இதுபோலவே, பல விஷயங்களில் இன்றைய தர்மம் நாளைக்கு அதர்மமாகி தலைகீழாக மாறக்கூடும்.

அப்பேர்பட்ட நிலைமை வரும்போது, இன்றைய நிலைமையெல்லாம் கடவுள் கட்டளை என்றால், அதை மாற்ற முற்படுகின்றவன் - கடவுள் கட்டளையை மறுக்க, ஏன், கடவுளையே மறுக்கத் துணிந்தாக வேண்டும். கடவுளை மறுக்கத் துணிந்தவனே தர்மத்தின் பேரால் உள்ள இன்றைய கொடுமைகளை ஒழிக்க முடியும். அப்படிக்கில்லாமல், கடவுளுக்கும், மோட்சத்திற்கும் பயந்து கொண்டிருப்பவனால் - ஒரு காரியமுமே செய்ய முடியாது என்பது உறுதி. ■

*- 21.5.49 நாளிட்ட 'குடி அரசி'ல் எழுதிய கட்டுரை.*



படிப்பகம்

www.padippakam.com

YEZHUTCHI DALIT MURASU, Tamil Monthly, Regd. No.: TN/MS(S)/768/99, RNI TC.TN.TAM 11342 Posted at Patrika Channel Egmore RMS/1 Periodicals Regd. No.: 71325/97

With Best Compliments From

# JAIN SONS

239, ROYAPETTAH HIGH ROAD
CHENNAI - 600 014
☎ : 856 50 62

PERIODICALS POSTED AT EGMORE RMS/1
PATRIKA CHANNEL ON 4,5 & 6th of Every Month

அனுப்புனர் :
பெ. சந்திரசேகரன்
6, 97வது தெரு
15வது செக்டர்
கே.கே. நகர்
சென்னை - 600 078

Licence No. 53, Licensed to Post without Prepayment

பெறுநர்

..............................................

..............................................

..............................................

..............................................

*Owned and Published by* **P. Chandragesan** from No. 6, 97th Street, 15th Sector, K.K. Nagar, Chennai - 600 078 and printed by G.P. Ramachandran at Thamizhmarai Achagam, 32, 3rd Avenue, Ashok Nagar, Chennai - 600 083 Editor : P. Chandragesan

படிப்பகம்